அருள் தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாய்

மலர் : 6 இதழ் : 1 ஜனவரி – 2015 (தனிச்சுற்றுக்கு மட்டும்)
thirukkalyanamatha.com



# திருக்கல்யாணத் தாய்

**www. thirukalyanamatha.com** தொலைபேசி : 04639 - 261230

**kalyanamatha@gmail.com**

ஆசிரியர் & வெளியிடுபவர்

பேரருட்திரு. முனைவர். **R. ஜோசப் ரவிபாலன்**



**ஆலோசகர் குழு**

அருட்திரு. ஜாண் போஸ்கோ
அருட்திரு. சிலுவை தங்கம்
அருட்திரு. டென்சில் ராஜா
அருட்திரு. ஜோசப் ஸ்டார்லின்
அருட்திரு. ஜோசப் பாக்கியராஜா
அருட்சகோதரி. புளோரா

**ஆசிரியர் குழு**

அருட்திரு. பிரான்சிஸ் வசந்தன்
அருட் சகோதரி. மைக்கிள்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோனி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்



**தொடர்பு முகவரி**

திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230



**விளம்பரம் செய்ய தொடர்புக்கு...**

திருத்தலக்கடை : 04639 -261330
திருத்தல அலுவலகம் : 04639 -261430


## மலரின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| திருப்பாடல்கள் 5 | 4 |
| மறைப்பொருளைக் கொண்ட ரோஜா மலரே | 7 |
| அறிந்து ஜெபிப்போம் | 9 |
| திருச்சபைச் செய்திகள் | 12 |
| எளிய உள்ளம் | 17 |
| அற்புதங்கள் சாட்சிகள் | 19 |
| மரியாளின் நற்பண்புகள் | 21 |
| எனது கிராமம் | 23 |
| ஆன்மீக அழகு | 28 |
| வாழ்வுதரும் வார்த்தைகள் | 31 |



வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

# ஆசிரியரின் அருளுரை



இயேசுவில் அன்புக்குரியவர்களே! திருக்கல்யாணத் தாயின் அருமையான பிள்ளைகளே! உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை திருக்கல்யாணத் தாய் மாத இதழ் சார்பாக மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2015 ஆம் ஆண்டு முழுவதும் திருக்கல்யாணத்தாயின் பரிந்துரையால் உங்கள் வாழ்வு வளம் பெற்றிடவும் நீங்கள் நினைக்கிற யாவற்றிலும் வெற்றி காணவும் உங்களை மனதார வாழ்த்துகிறேன்.

கடந்த ஆண்டிலே நம் அன்னையின் மூலம் எல்லாம் வல்ல இறைவன் நம் மீது அன்பையும் அருளையும் ஏராளமாய் பொழிந்ததற்காக அவருக்கு நன்றி கூறுவதோடு, கடந்த காலத்தில் நிறைவேறாத நம் எண்ணங்களும், எதிர்பார்ப்புகளும் பிறந்துள்ள இந்தப் புத்தாண்டில் திருக்கல்யாணத்தாயின் கரிசனை மிகுந்த பரிந்துரையினால் மிகச் சிறப்புடன் நிறைவேறும் என்கிற நம்பிக்கையில் வாழ்வோமாக!

ஒவ்வொர் ஆண்டும் முதல் நாளிலேயே அன்னை மரியாஇறைவனின் தாய் என்கிற பேருண்மையை தாய்த் திருச்சபை கொண்டாடுகின்றது. திருச்சபையின் தொடக்கக் காலத்தில் அன்னை மரியா மீது பக்தி முயற்சிகள் இல்லாமல் இருந்தது. ஆனால் கி.பி. 4ஆம் நூற்றாண்டு முதல் மரியா மீதுள்ள பக்தி வளரத் தொடங்கியது. அதற்கு முன் பக்தி முயற்சி ஏதும் இல்லையெனினும் அன்னை மரியா மிகவும் மரியாதையுடன் நினைக்கப்பட்டார்.

இயேசு கிறிஸ்துவின் மண்ணுலகப் பணி வாழ்வுக்குபின் தொடக்கக்காலத் திருச்சபையினரோடு அன்னை மரியா மிகவும் நெருங்கி, இணைந்து வாழ்ந்தார் என்று புதிய ஏற்பாடு சாட்சியம் கூறுகிறது (திப 1:14). தோமா நீங்கலாக இயேசுவின் மற்ற திருத்தூதர்கள் சூழ்ந்து நிற்க, அன்னை மரியா இவ்வுலக வாழ்விலிருந்து விடைபெற்றார் என்றும், அவர் இறந்த சில நாள்களுக்குப்பின் தோமா ஒருவர் மட்டும் சாட்சியாக நிற்க மரியா தம் உடலோடும், ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்றும் திருச்சபையின் பாரம்பரியம் கூறுகின்றது.இருப்பினும் அன்னை மரியா மீதுள்ள பக்தி சில காலம் கடந்த பின்புதான் திருச்சபையில் நிலைகொண்டது என்பதுதான் உண்மை.

அன்னை மீதுள்ள பக்தி வளரத் தொடங்கியபோது, அன்னையைப் பற்றிய சில உண்மைகள் அறிவுப்பூர்வமாகவும், விவிலிய ரீதியாகவும் இறையியல் அடிப்படையிலும் சிந்திக்கப்பட்டு, பலராலும் விவாதிக்கப்பட்டன. அப்படி மிக உன்னிப்புடனும், வேகத்துடனும் விவாதிக்கப்பட்ட உண்மைகளுள் மிக முக்கியமானதொன்று மரியா இறைவனின் தாய் என்பது. மரியா இறைவனைப் பெற்றெடுத்தத் தாய் என்று திருச்சபை பகிரங்கமாகப் போதித்த போது, சிலர், குறிப்பாக, மறை ஆயர்களும்,இறையியல் நிபுணர்களும்

அதை மிகக் கடுமையாய் எதிர்த்தனர். அப்படி எதிர்த்தவர்களில் துருக்கி நாட்டில் கான்ஸ்டாண்டிநோபிள் என்கிற இடத்தின் பேராயரான நெஸ்தோரியுஸ் (கி.பி. 386-450) குறிப்பிடத்தக்கவர். அவருக்கு சில ஆதரவாளர்கள் இருந்தனர்.

அவரது வாதத்தின்படி, இறைவனால் படைக்கப்பட்ட ஒரு பெண் தொடக்கமும் முடிவும் இல்லாத இறைவனை பெற்றெடுப்பதற்கு வாய்ப்பே இல்லை.மரியா கடவுளை பெற்றெடுத்தவர் என்று சொல்வதைவிட, இயேசு கிறிஸ்துவை, அதாவது,மெசியாவைப் பெற்றெடுத்தவர் என்று சொல்வதுதான் சரியானது என்பது அவரது கருத்தாக இருந்தது.நெஸ்தோரியுஸின் கருத்தை முதலாவதாக எதிர்த்தவர் எவுசேபியுஸ் (கி.பி. 5ஆம் நூற்றாண்டு) என்பவர். அவரது எதிர்ப்பைத் தொடர்ந்து, மிக பலமாக நெஸ்தோரியுஸை எதிர்த்து நின்றவர் அலெக்சாந்திரியாவின் பிதாப்பிதா சிரில் (கி.பி. 376-444) என்பவர். கி.பி.431ஆம் ஆண்டில் துருக்கி நாட்டிலுள்ள எபேசு நகரத்தில் நடைபெற்ற திருச்சபையின் பொதுச்சங்கத்தில் நெஸ்தோரியுஸின் கருத்து விவாதிக்கப்பட்டு, அவரது போதனை திருச்சபையின் போதனைக்கு எதிரானது என்று தீர்ப்புக் கூறப்பட்டது. பேராயர் பதவிலிருந்து அவர் நீக்கப்பட்டு, அவரது ஆசிரமத்திற்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டார்.

மரியா இறைவனின் தாய் என்கிற உண்மை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது என்றுஎபேசு பொதுச்சங்கம் மிக உறுதியாக அறிவித்தது. இருபது ஆண்டுகளுக்குப்பின், கி.பி. 451ஆம் ஆண்டில் அதே துருக்கி நாட்டிலுள்ள கால்ஸிதோன் என்கிற இடத்தில் நடைபெற்ற பொதுச்சங்கத்தில், கிறிஸ்தியல் உண்மையைத் தெளிவுப்படுத்திய வேளையிலும் மரியா இறைவனின் தாய் என்கிற உண்மை மீண்டும் உறுதியுடன் பிரகடனம் செய்யப்பட்டது.

அன்னை மரியா இறைவனின் தாய் என்கிற உண்மையைத் திருச்சபையுடன் சேர்ந்து நாம் பறைசாற்றுகிறபோது, பலர் கேள்விகள் எழுப்பலாம். வரலாற்றில் ஒரு குறிப்பிட்டக் காலக்கட்டத்தில் பிறந்து, வாழ்ந்து, இறந்த ஒரு சாதாரணப் பெண் எவ்வாறு பிறப்பும், இறப்பும் இல்லாத இறைவனைப் பெற்றெடுக்க முடியும்? நியாயமான கேள்விதான். இந்தக் கேள்விக்கு நாம் எவ்வாறு பதில் தர முடியும்? இறைவனுக்கு தொடக்கமும் இல்லை, முடிவும் இல்லை. அன்னை மரியா உலக வரலாற்றில் பிறந்த ஒரு பெண்.



அவர் இறைவனால் ஒரு சிறப்பானப் பணிக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இறைவனின் எதிர்பார்ப்பின்படி நடந்து சிறப்படைந்தார். இந்த உலகம் உருவாகும் முன்பு செயலாற்றிய இறைவனை அன்னை மரியாதான் பெற்றுத் தந்தார் என்று சொல்வது தவறு. அப்படி ஒரு கருத்தை முன்வைத்து பேசினால் ஒரே கடவுள் என்ற தத்துவம் முறியடிக்கப்பட்டு, கிறிஸ்தவத்தின் அடிப்படை விசுவாசத்தின் அடித்தளம் ஆட்டம் கண்டுவிடும். சில மதங்களில் கூறப்படுவதுபோல,

தாய்க் கடவுள், மகன் கடவுள் என்று பல கடவுள்களைப் பற்றிப் பேச வேண்டிய சூழ்நிலை உருவாகி விடும்.

அப்படியானால், அன்னை மரியா எப்படி இறைவனின் தாய் என அறியப்படுகிறார்? மீட்பின் வரலாற்றில் இறைவன் மனிதனாகப் பிறக்க வேண்டும் என்பது இறைவனின் ஏற்பாடு. கத்தோலிக்க கிறிஸ்தவத்தின் இறையியல் சிந்தனையின் அடிப்படையில், ஒரே கடவுள் மூன்று ஆள்களாய் செயல்படுகிறார் அல்லவா!இரண்டாம் ஆளாகிய சுதன் மானிட நிலையில் பிறக்க வேண்டும் என்கிற இறைத் திட்டத்தில் அன்னை மரியா சேர்ந்து தம் முழு ஒத்துழைப்பையும் நல்கினார்.


யோவான் தன் நற்செய்தி நூலில் எழுதியுள்ளதுபடி, தொடக்கத்தில் கடவுளோடு இருந்தது. கடவுளாயும் இருந்தது, படைக்கும் செயலில் ஈடுபட்ட வார்த்தை (யோவா 1:1-3) மானிடராகி நம்மிடையே குடிகொண்டார் (யோவா1:14).உன்னத கடவுளின் வல்லமையினாலும், தூய ஆவியின் ஆற்றலாலும் மரியா இறைமகனைப் பெற்றெடுப்பார் என்று கபிரியேல் தூதர் அறிவித்தார் (லூக் 1:35; மத் 1:20). காலம் நிறைவேறிய போது, கடவுள் தம் மகனை பெண்ணிடம் பிறந்தவராய் அனுப்பினார்(கலா 4:5) என்று பவுல் எழுதியுள்ளார். மரியா பெற்றெடுத்தது வெறுமென இயேசு என்கிற மெசியா அல்ல; மாறாக, அவர் கடவுளின் மகனைப் பெற்றெடுத்து,நம்மோடு வாழும் இம்மானுவேலாக (காண்க. மத் 1:23) அவரை உலகிற்கு அர்ப்பணித்தார். மரியாவிடம் பிறந்தவர் கடவுளின் மகன் என்று சொல்லும்போது,மகன் என்கிற முறையில் அவர் ஒரு படி கீழேதான் இருக்கிறார் என்று நினைக்க முடியாது.

மரியா பெற்றுக்கொடுத்தது எல்லாம் வல்ல இறைவனையே. நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம் (யோவா 10:30) என்று இயேசு சொல்வதிலிருந்தும், நீரே என ஆண்டவர்! நீரே என் கடவுள் (யோவா 20:28) என்று தோமா தன் விசுவாசத்தை உணர்த்துவதிலிருந்தும், கடவுள் வடிவில் விளங்கிய கிறிஸ்து இயேசு தம்மையே வெறுமையாக்கினார் என்று இயேசுவின் தாழ்ச்சியை (பிலி 2:6-11) கவிதை வடிவில் பவுல் வருணிப்பதிலிருந்தும்,இயேசு கடவுள் என்பது தெளிவாகிறது. ஆகவே மீட்பர் இயேசுவின் தாய் இறைவனின் தாயாகப் போற்றப் படுவதில் தவறில்லை.

மொத்தத்தில், உலகம் உருவாவதற்கு முன்பாக அன்னை மரியா கடவுளைப் பெற்றுத் தந்த தாய்க் கடவுள் என்று சொல்வது மிகப் பெரிய தவறு. மாறாக, கடவுள் ( தமத்திருத்துவத்தின் இரண்டாம் ஆளாகிய மகன்/சுதன் ) இவ்வுலகிலே மனிதக் கோலத்தில் வந்தபோது, அவரை மனிதக் குழந்தையாக அன்னை மரியா பெற்றுத் தந்தார். அந்த அடிப்படையில் அன்னை மரியா இறைவனின் தாய் என்பதுதான் நம் விசுவாசம். உலக மீட்பர் இயேசு (யோவா 4:42) உண்மையில் கடவுள்.உலகிற்கு மீட்பு வழங்கும்நோக்கில், உலகிலே மனிதராய் பிறப்பதற்குமுன், இறைவன் மரியாவை மீட்டார். அதாவது, ஜென்ம பாவமின்றி, கடவுளின் குழந்தையாகவே, அதாவது, மீட்கப்பட்டவராகவே மரியா பிறந்தார். ஆகவே மரியாவை இறைவனின் தாய் என்று கொண்டாடிப் போற்றுவது தகுமே!

புதிதாகப் பிறந்துள்ள ஆண்டில் இறைவனை பெற்றெடுத்தத் தாய் மரியா நம் அனைவரின் தாய் என்பதை மனதில் எண்ணி, அவரது பிள்ளைகளாகத் தொடர்ந்து வாழ முற்படுவோமாக!

– பேரருட்திரு. முனைவர். R.**ஜோசப் ரவிபாலன்**
**திருத்தல அதிபர்**
திருக்கல்யாணமாதா திருத்தலம், பொத்தக்காலன்விளை.




# திருப்பாடல் 5

பேரருட்திரு. முனைவர். R.ஜோசப் ரவிபாலன்

திருப்பாடல் ஐந்து, தனியாரின் புலம்பல் வகையைச் சேர்ந்தது. எருசலேம் ஆலயத்தினுள் நுழையும் போது பாடக்கூடிய பாடல்களைப் போன்றதாயும் (திபா 16; 24:3-6; 26; 101) இத்திருப்பாடல் இருக்கிறது என்கிற கருத்தும் உள்ளது. நீதியிலும், நேர்மையிலும் நிலைத்து நிற்பதோடு, கடவுளிடம் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டு, நல்வாழ்வில் ஈடுபட்டள்ள நபர் ஒருவர், கடவுளிடம் தனிப்பட்ட முறையில் உருக்கமாக வேண்டுவதை இத்திருப்பாடல் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. கடவுளிடம் ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டுள்ள இத்திருப்பாடலின் ஆசிரியர், கடவுளை நம்பாமலும், அவரிடத்தில் பிரமாணிக்கத்தைக் காட்டாமலும் வாழ்ந்து கொண்டிருக்கும் சில நபர்களால் தனக்கு நேர்ந்துள்ளத் துன்பங்கள் குறித்து கடவுளிடம் முறையிட்டு வேண்டுவதாக இத்திருப்பாடல் அமைந்துள்ளது. இத்திருப்பாடலை இயற்றிப் பாடியுள்ள ஆசிரியர் கடவுள்மீது வைத்துள்ள அன்பானது, தீமைக்கு எதிரான அவரது நடவடிக்கைக்கு சமமானதாகப் பார்க்கப்படுகிறது. தீயவர்களின் நட்பை ஆசிரியர் முற்றிலும் வெறுக்கிறார் என்கிற உண்மை இத்திருப்பாடலில் வெளிப்படுத்தப்படுகிறது.

திருப்பாடல் நான்கு, மாலை மன்றாட்டாகப் பாடப்படுவது போல,இத்திருப்பாடல் காலை மன்றாட்டாக கடவுளுக்குச் சமர்பிக்கப்படுகிறது. மேலும், இது மூன்றாம் திருப்பாடலுக்குஇணையானதாகக் கருதப்படுகிறது. திருப்பாடல்கள் ஐந்திற்கும், நான்கிற்கும் இடையே நெருங்கியத் தொடர்பு இருப்பதை, இப்பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். வேண்டுதல் அல்லது மன்றாடுதல் என்கிற கருத்து இந்த இரண்டு திருப்பாடல்களிலும் வலியுறுத்தப்படுகிறது(திபா 4:1ஆ; 5:2ஆ); ஐந்தாம் திருப்பாடலில் கேட்டருளும் என்கிற சொல் (திபா 5:3அ) பயன்படுத்தப்பட்டுள்ளதுபோல, நான்காம் திருப்பாடலிலும் செவிசாய்த்தருளும் (திபா 4:1அ) மற்றும்,செவி சாய்க்கின்றார் (திபா 4:3ஆ) என்கிற சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பொய் என்கிற சொல் இந்த இரண்டு திருப்பாடல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது (திபா 5:6அ; 4:2ஆ). மேலும் மனிதர் வெறுமையை விரும்பிப் பொய்யானதை நாடிச் செல்வார்கள் என்று திபா4:2அ கூறுகிறது; ஆனால் கடவுள் தீமையிலும் உழலும் யாவரையும் வெறுக்கின்றார் என்று திபா 5:5ஆ சொல்கிறது. இந்த இரண்டு பகுதிகளிலும் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே உள்ள வேற்றுமை உணர்த்தப்படுகிறது.

திருப்பாடல் ஐந்தினை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கலாம்: 1.மன்றாட்டிற்குச் செவிசாய்த்திட கடவுளிடம் விண்ணப்பம். (இவா 1-3); 2. தீயவர்களைக் கடவுள் வெறுத்து விலகுதல் (இவா 4-6); 3. ஆலயத்தில் ஆசிரியர் ஆண்டவரை வழிபடுதல் (இவா 7-8); 4. தங்களின் பேச்சினால்தீயவர்கள் புரியும் பாவம் மற்றும் தீயவர்களைத்




தண்டிக்குமாறு ஆசிரியர் கடவுளிடம் செலுத்தும் மன்றாட்டு (இவா 9-10); 5. நேர்மையாளர் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டு, பாதுகாக்கப்படுதல். தான் அடையப்போகும் மகிழ்ச்சியையும், தீயவர்கள் அனுபவிக்கப்போகும் துன்பத்தையும் ஆசிரியர் வேறுபடுத்திக் காட்டுகின்றார் (இவா 7ஆ, 10ஆ). இத்திருப்பாடலின் முதல் பகுதியைப் பார்க்கும்போது, இது காலை வழிபாட்டின்போது பாடப்பட்டப் பாடல் என்பது தெளிவாகிறது. மரியாதை கலந்த அச்சத்துடன் கடவுளை வழிபடுவதற்காகவும், அவருடைய வார்த்தைகளைக் கேட்பதற்காகவும், ஆசிரியர் ஆலயத்தினுள் நுழைந்து, அங்குள்ளத் திருப்பீடத்தை உற்று நோக்குகையில், நம்பிக்கையும், புத்துணர்வும் தன் உள்ளத்தில் உதிப்பதை அவர் உணர்கின்றார். நிறைவான நம்பிக்கை யுடனும், மிகுந்த எதிர்பார்ப்புடனும் அவர் கடவுளிடம் உருக்கமாக மன்றாடுகின்றார். காலை வழிபாட்டின்போது கடவுளின் உதவி நாடி வேண்டுவது பொதுவான ஒரு பழக்கம் என்பது விவிலியத்தில் பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதை நாமறிவோம் (காண்க. திபா 46:6; 59:17; 90:14; 143:8; புல 3:22-23). ஆசிரியர் கடவுளிடம் மன்றாடுவது மட்டுமல்லாமல், காலை வழிபாட்டிற்குத் தேவையானவற்றை ஆயத்தம் செய்து, கடவுளுக்காகக் காத்திருக்கின்றார். தனது பெருமூச்சையும், கெஞ்சும் குரலையும் சுட்டிக்காட்டி, தன் நம்பிக்கை முழுவதையும் கடவுள்மீது மட்டுமே வைத்துள்ளதாகச் சொல்லி, மிகவும் உருக்கத்துடன் ஆசிரியர் கடவுளிடம் மன்றாடுகின்றார்.

கடவுள் தீமையையும், அநீதியையும் முற்றிலும் வெறுக்கின்றார் என்று இத்திருப்பாடலின் இரண்டாம் பகுதி எடுத்துரைக்கிறது. அதாவது,அநீதர்கள், பொய்யர்கள், ஆணவமிக்கவர்கள், ஏமாற்றுக்காரர்கள், கர்வம் நிறைந்தவர்கள், தற்பெருமைக்கொண்டோர்,பிறரைக் காயப்படுத்தி, துன்புறுத்துகின்றவர்கள், கொலைகாரர்கள் ஆசியோரைக் கடவுள் ஒருபோதும் ஏற்றுக்கொள்வதில்லை. இதே கருத்து வேறு சில திருப்பாடல்களிலும் வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம் (திபா 26:4-5; 101:3-5). அன்னை மரியா பாடியப் புரட்சிப்பாடலிலும் இந்தக் கருத்தோட்டத்தை நம்மால் பார்க்கமுடிகிறது (லூக் 1:47-55). பரிசேயரும் வரிதண்டுபவரும் பற்றிய உவமையில், கடவுள் முன்னிலையில் தற்பெருமைக்கொண்டவர்களாய் இருந்துகொண்டு, பிறரை இகழ்ந்து ஒதுக்குபவர்களைக் கடவுள் உதறித் தள்ளுகின்றார் என்று இயேசு (லூக் 18:9-14) மிக உறுதியுடன் சொல்வதை இத்திருப்பாடல் வழங்கும் கருத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

தீயவர்களைப் போலல்லாமல், இத்திருப்பாடலின் ஆசிரியர் கடவுளின்

உதவியுடன், இறையச்சத்துடனும்,பெருமகிழ்வுடனும் எருசலேம் ஆலயத்தினுள் நுழைகின்றார் என்று இத்திருப்பாடலின் மூன்றாம் பகுதி எடுத்துச்சொல்கிறது. இவ்வார்த்தைகளை ஆசிரியர் உச்சரிக்கும்போது, விவரிக்க முடியாத மகிழ்ச்சியும், பெருமிதமும்அவரை ஆட்கொள்வரைப் பார்க்கலாம். தீயவரிடமிருந்து வேறுபடுத்தப்பட்ட அவர், கடவுளால் அன்பாக ஏற்கப்பட்டு, ஆலயத்தினுள் தங்குதடையின்றி நுழைவதற்கு தகுதிபடைத்த நிலையில், உள்ளம் மகிழ்ந்தவராய், கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிக்கவும், அவரது வழியில் தொடர்ந்து செல்லவும் கடவுளின் உதவியை நாடுகின்றார். தன்னைச் சுற்றிப் பகைவர் பலர் இருப்பதைக் கடவுளுக்குச் சுட்டிக்காட்டி, கடவுளிடமிருந்து தன் பகைவர் தன்னைப் பிரித்துவிடாமலிருக்க, தான் நீதியின் பாதையில் நடந்திட கடவுளிடம் வரம் கேட்கின்றார் ஆசிரியர்.

தீயவர்களின் குணங்களையும், செயல்களையும் சுட்டிக்காட்டி, அவர்களுக்குத் தகுந்த தண்டனை வழங்கிடவேண்டும் என்று ஆசிரியர் கடவுளிடம் மன்றாடுவதை இத்திருப்பாடலின் நான்காம் பகுதியில் காண முடிகிறது. தீயவர்கள் தங்களின் தீய வார்த்தைகளினால் அழிவை ஏற்படுத்திட முற்படுகின்றனர். ஆகவே அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பது இத்திருப்பாடலின் ஆசிரியர் உறுதியான விண்ணப்பம். தீயோர் தங்களின் சூழ்ச்சியினாலேயே அழிந்துபோவர் என்கிற தன் நம்பிக்கையும் ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார். கடவுளின் பேரருள் மனிதருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்து, அவர்களைக் கடவுளிடம் அழைத்துச் செல்கிறது (இவா 7); ஆனால் தீயோரின் தீச்செயல்கள் அவர்களைக் கடவுளின் திருச்சன்னிதானத்திலிருந்து அகற்றி விடுகின்றன (இவா 10).

கடவுளின் ஆதரவை நாடுபவர்கள் கடவுள் திருமுன் மகிழ்ந்திருப்பர்; கடவுளின் ஆசீரைப் பெறுகின்ற நேர்மையாளர்கள் அவரது கருணை என்னும் கேடயத்தினால் பாதுகாக்கப்படுவர் என்கிற நம்பிக்கையை,இத்திருப்பாடலின் இறுதி வரியில் ஆசிரியர் தெள்ளத்தெளிவாக எடுத்தியம்புகின்றார். நம்பிக்கை தரும் இந்த இறுதி வாக்கியம், நல்ல ஆயர் இயேசு தம் மந்தையாகிய நம்மை அன்புடன் பாதுகாத்து வழி நடத்துவதைச் சுட்டிக்காட்டுகிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

## கடவுளும் விஞ்ஞானியும்

விஞ்ஞானி முன்பு கடவுள் தோன்றினார். விஞ்ஞானி அசரவில்லை. குளோனிங் மரபியல் சோதனை நானோ டெக்னாலஜி என்று கலக்க ஆரம்பித்து விட்டோம். இனி உங்கள் உதவி எங்களுக்குத் தேவைப்படாது என்று நம்புகிறேன் என்று கடவுளின் உள்ளம் கலங்க பதில் கூறினார் விஞ்ஞானி. உள்ளம் தேறிய கடவுள் புதிதாக ஒரு மனிதனை படைப்பது இருக்கட்டும். ஒரு பொம்மையைப் படைத்துக் காட்டுப் பார்க்கலாம் என்றார்.

கடவுளைப் பார்த்து சிரித்துக் கொண்டே விஞ்ஞானி கீழே இருந்து கொஞ்சம் களிமண்ணை எடுத்தார். கடவுள் விஞ்ஞானியைப் பார்த்து களிமண் நான் படைத்தது என்று கூறினார். விஞ்ஞானி மௌனமாக நின்றார்.

– **மெரின் வளன்,** ராமன்புதூர்.

# மறைப்பொருளைக் கொண்ட ரோஜா மலரே



மரியா இறைவிருப்பத்தை வெளிப் படுத்துகிற ஒரு மறை பொருள். ஏனெனில், இறைவனே ஒரு மறைபொருள். எந்த ஒரு வசதி வாய்ப்பு மில்லாத, முக்கியத்துவம் பெறாத நாசரேத் (யோவான் 1:46) என்னும் குக்கிராமத்தில் பிறந்த மரியா, அதிமுக்கியத்துவம் வாய்ந்த இறைவனுக்கே தாயாவதென்பது ஒரு மறைபொருளே! எளிமையின் உருவான மரியா விண்உலக இராணியாக உயர்வதென்பது ஒரு மறைபொருளே! அன்றாட வாழ்வில் துன்பங்கள் நிறைந்த சூழலில் வாழ்ந்த மரியா , பாவமற்றவளாகவும், பரிசுத்தமானவளாகவும் இருந்து, உடலோடும், ஆன்மாவோடும் விண்ணிற்கு எடுத்துச் செல்லப்படுவதும் ஒரு மறைபொருளே!

வரலாற்றுப் பிம்பம்

மறைபொருளைக் கொண்ட ரோஜா மலரே எனும் இத்தலைப்பானது, 1587-ல் திருத்தந்தை 5-ஆம் சிக்ஸ்துவால் அங்கீகரிக்கப்பட்டது. மலர்களுக்கெல்லாம் அரசியாக ரோஜா இருப்பதைப்போல, புனிதர்களுக்கெல்லாம் அரசியாக மரியா திகழ்வதால், ரோஜா மலரோடு மரியா ஒப்பிடப்படுகிறார். மரியா அனைத்தையும் தன் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்து வந்ததால் அவர் சிறந்த மறைபொருளாய் இருக்கிறார் ( லூக்கா 2 :19,51). ஆதிகாலத்தில் , ரோஜா மலரானது மறைபொருளின் அடையாளமாகவும் , மறைசாட்சியம் மற்றும் விண்ணகத்தைக் குறிக்கும் அடையாளமாகவும் விளங்கியது. மரியா ஓர் மறைபொருள் என்பதை அவரது வாழ்வின் நான்கு முக்கிய பகுதிகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. அவை: 1. மரியா இறைவனின் தாய்
2. மரியா என்றும் கன்னியானவர், 3. மரியா ஜென்ம பாவமின்றி உற்பவித்தவர்
4. மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டவர்.

எகிப்து நாட்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் கி. பி. 3 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே , மரியா இறைவனின் தாய் என ஏற்று வாழ்ந்து வந்தனர். திருச்சபைத் தந்தையர்களில் ஒருவரான ஆர்ஜென் **(ORIGEN)** இக்கருத்தை முதன் முதலில் வெளிப்படுத்தினார். இக்கோட்பாடு முதலில் எஃபேசுஸ் திருச்சங்கத்தில்தான் (431) அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

அந்தியோக்கியா மற்றும் அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த பிரதிநிதிகள் இத்திருச்சங்கத்தில் பங்கேற்றனர். இறைத்தன்மையும் , மனிதத்தன்மையும் தண்ணீர் மற்றும் எண்ணெயைப் போல இயேசுவில் தனித்தனியாக இருக்கின்றன என்றும், மரியா மனிதத் தன்மை கொண்ட இயேசுவை மட்டும்தான் பெற்றெடுத்தார்,

எனவே , மரியா கிறிஸ்துவைச் சுமந்தவர் என்றும் நெஸ்டோரியஸ் தலைமையிலான அந்தியோக்கியக் குழு தங்கள் விவாதத்தை எழுப்பியது .மாறாக, இறைத்தன்மையும், மனிதத்தன்மையும் , தண்ணீரையும் பாலையும் போன்று இயேசுவில் இரண்டறக் கலந்திருக்கின்றன என்றும் மரியா இரண்டு தன்மைகளையும் கொண்ட இயேசுவைப் பெற்றெடுத்தார். எனவே மரியா இறைவனின் தாய் என்றும் , சிரில் தலைமையிலான அலெக்சாந்திரியா குழு தங்களது விசுவாத்தை எடுத்துரைத்தது. திருச்சபை இக்கூற்றை நியாயப்படுத்தி , மரியா இறைவனின் தாய் என அறிவித்தது. இக்கோட்பாடு,கேல்சிடன் (451) திருச்சங்கத்தில் மறு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

– தாயே எங்கள் தஞ்சம்

# தனி மரம்

**– திவ்யா கிங்ஸ்லி,** பொற்பை

தனிமரம் தோப்பாகாது என்பது பழமொழி. ஆனால் இன்று பல தோப்புகள் பிரிந்து தனிமரங்களாக காட்சியளிக்கின்றன. நான் இங்கு தோப்பு என்று கூறுவது கூட்டுக்குடும்பங்களை. இன்று நமது ஊரையே எடுத்துக் கொண்டால் எத்தனை பேர் ஐந்து, ஆறு பிள்ளைகளைப் பெற்று ஒரே கூட்டமாக வாழ்ந்தவர்கள் இன்று பிள்ளைகள் ஓரிடம், பெற்றோர்கள் ஓரிடம் என்று வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

அதிலும் எத்தனை பேர் வயதான காலத்தில் மனைவியை இழந்து அல்லது மனைவி, கணவனை இழந்து தானே சமைத்து, சில நாள் சாப்பிட்டு சில நாள் சரியாக சாப்பிடக்கூட மனமில்லாமல் பழைய நினைவுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதில் வியப்பு என்னவென்றால் பலருக்கு பிள்ளைகள் நல்ல தொழிலிலோ, வேலையிலோ இருக்கின்றார்கள். ஆனால் இங்கு தனியாக இருக்கும்,அப்பா அல்லது அம்மா எப்படி இருக்கிறார்கள் என்ற கவலையில்லை. அதை நினைத்துப் பார்க்க நேரமுமில்லை. இந்தப் பெரியவர்கள் செய்த குற்றமென்ன. இதில் பலருக்கு பல வியாதிகள் வேறு, பேச்சித்துணைக்குக் கூட ஆளில்லை இவர்களுக்கு. இவர்கள் மனதில் ஓடுவது எல்லாம் ஒரே விஷயம் தான் அது பணமில்லை பாசம் மட்டும்தான்

நாம் இந்த உலகிற்கு காலடி எடுத்து வைக்க உதவியவர்களே அம்மாவும், அப்பாவும் தான். இதை மனதில் வைத்து ஒவ்வொரு பிள்ளையும் தன் கடமையை சரிவர செய்யவேண்டும். வேலை நிமித்தம் வெளியில் இருப்பவர்கள் மாதம் ஒருமுறையாவது தன் அம்மா, அப்பாவை பார்க்க ஊருக்கு வரவேண்டும். அவர்கள் தேவையென்ன, உடல் நலம் விசாரிப்பு போன்றவற்றை சரியாக செய்ய வேண்டும். தன் இருப்பிடத்திற்கு அவர்களை கூட்டிச்செல்ல வற்புறுத்தவேண்டும். ஏனெனில் சிலர் தன் சொந்த ஊரைவிட்டு வர சம்மதிக்க மாட்டார்கள். ஏனெனில் நமது ஊர் போன்ற அமைதியான, சுத்தமான, அழகான கோயில் கொண்ட இடத்தை விட்டுச் செல்ல யாருக்கும் மனம் வராது.

எனவே எவ்வாறெல்லாம் முடியுமோ அந்த விதத்தில் நாம் தனியாக இருக்கும் பெற்றோரை தொலைபேசியிலோ, நேரிலோ பேசி அவர்கள் மனதை குளிர்விப்பது நம் கடமையாகும். அவ்வாறாக நம் தாய், தந்தையரை நாம் அரவணைத்து நடந்து கொண்டோமேயென்றால் கண்டிப்பாக நாம் வாழ்வில் முன்னேற்றம் அடைவோமே தவிர வீழ்ந்துவிடமாட்டோம். ஏனெனில் பெற்றோர்கள் தரும் ஆசிர்வாதமே நமக்கு இறுதி வரை நிலைத்துநிற்கும். எனவே நம் இறைவனின் தாய் குடிகொண்டிருக்கும் நம் ஊரில் பிறந்த அனைவரும் நம் தாய், தந்தையிரிடம்அன்பும், பரிவும் காட்டுவோமாக.

# அறிந்து ஜெபிப்போம்!

- nghw i g Ngh ]

n[gk;vdgJ vd;d?

flTNshL ciuahLtJ n[gk. xU eyy ezgh ekfF ,Uejhy ek vyyh tþ\aqfisAk kdk tþIL gfþheJ nfhstJ elGffhd ,yffzk. flTsþlk ehk ek thofifiaŠ gwwþ NgRtNj n[gk. ehk flTsþlk ekJ ,jajij jþweJ NgRtJk› ekNkhL NgRk flTsþd thhjijfF jþwej kdjJld nrtþkLggJNk n[gk. vijggwwþAk ftiyggl Ntz lhk. Mdhy edwþNahL $ba ,iwNtzly› kdwhlL Mfþa midjjþd toþahfTk flTsþlk cqfs tþz zggqfisj njhþtþAqfs. mgnghOJ› mwþntyyhk flej ,iwmikjþ fþwþ]J ,NaRNthL ,izeJss cqfs cssjijAk kdjijAkghJfhfFk.-gþyþg 4:6-7

vjw;fhf n[gk;nra;a Ntz;Lk;?

flTsþd mUfþy ehk neUqfþtu n[gk ekfFj Jiz nrafþwJ. flTsþlk ehk ngwwed ikfSfF edwþnrhyYk NghJk› mthGfoghLkNghJk› ekJ ghtqfSffhf kdk tUeJk NghJk› ekJ gyfdjjþy mtuJ cjtþia ehLk NghJk› mth rþjjjij eþiwNtwWk NghJk› flTs ekNkhL NgRfþwhh. flTs ekJ rþejidfisAk vz zqfisAk khwwþ ehk vdd nraaNtz Lk vdW mth tþUkGfþwhNuh mijr nraaj J}zLfþwhh. ehk n[gk nratjd %yk flTsþd rþjjjij eþiwNtww mjþf thagig ekfFf nfhLffþdwhh. ,jd %yk ehk flTsþy ,izeJ thOk Ngwiwg ngWfþNwhk. KjjþgNgW ngww mdid njuhrhTk kww Gdþjhfsk ,gNgwiwg ngwwthfNs. NfSqfs: ngwWf nfhstHfs. mgNghJ cqfs kfþorrþAk eþiwtilAk. Nahthd 16: 24

ahhþlk;n[gk;nra;aNtz;Lk;? **கடவுளிடமா? இயேசுவிடமா? புனிதர்களிடமா?**

ehk flTsþlNkh myyJ NaRtþlNkh myyJ J}a MtþaþlNkh n[gk nraayhk. ,ej %thþlKk vOggggLk n[gqfs tþtþyþajjþy mNdf ,lqfsþy fhzggLfþdwd. flTs xUthjhd. ,NaRtþlk n[gk nraAk NghJ ,iwj jeijaþlKk ehk n[gk nrafþNwhk. ehk n[gk nraAk thhjijfisAk fleJ flTs ek cssjijAkvz zqfisAk mwþaf $bath.Gdþjhfs flTs myy. mthfs flTsþd tþUggjjþdgb ,tTyfþy thoej kdþjhfs. jqfsþd J}a thothy tþz zfjijRjejhþjJfnfhzlthfs.mthfs ,iwtdþd mUfþy mkhejþUffþwhhfs› ekffhf flTsþlk ghþeJ NgRfþwhhfs› ehk nraAk NtzLjyfis flTsþlk kdwhb ekfFg ngwWj jUfþwhhfs vdgNj ekJ tþRthrk. rNfhju rNfhjhþfNs›ek Mz ltH ,NaR fþwþ]Jit KddþlLk J}a Mtþ ek cssjjþy nghoþeJss mdig KddþlLk ehd cqfisf NflLf nfhstJ: vdffhff flTsþlk Ntzb› vd Nghuhlljjþy vdfFj Jiz nraAqfs vdffhff flTsþlk Ntzb› vd Nghuhlljjþy vdfFj Jiz nraAqfs.- cNuh 15:30

flTshfþa ,NaRVd;n[gk;nra;jhh;?

,NaR flTSk kdþjDkhdth. ,ej cyfþy ,NaR KO kdþjdhf mtjhþjjhh. mth flTshaþUejhYk ,ej cyfþd kdþjiug Nghy kdþjuhf thoejhh. mth ,iwjeijiar rhheJ thoejhh. vyyhtwwþYk ,iwjeijjaþd rþjjjijNa eþiwNtwWfþdwhh. ,iwjeijia KOikahf mdGnraJ mthþy thotNj thothff nfhz bUejhh. MfNt mtNuhL ciuahLtjþy mjþf Neujij foþffþdwij ehk ewnrajþfsþy fhzfþdNwhk. mtH ,tTyfþy thoej fhyjjþy› jkikr rhtþyþUeJ fhgghwwtyytiu NehffÞ cujjக் Fuy vOggþ fz zH rþejþ kdwhb Ntz bdhH. mtH nfhz bUej ,iwggwW fyej mrrjijKddþlL› flTs mtUfFr nrtþrhajjhH. mtH ,iwkfdhaþUejJk› Jdgqfs toþNa foggbjiyf fwWfnfhzlhH. vgþNu 5: 7-8

f l T s; ek; Nji t f i sAk; mwe;jUggth; gd;dh; ehk; Vd; ek; Njit fS f;f fhfn[gf;fNt z;Lk;? Vd;k; z;Lk;k; z;Lk;n[gf;fNt z;Lk;?

 நhk n[gk nraAk NghJ jhorrahd cssjiijAk f l T s Kd ekKila ,ayhikiaAk nts ggLjJf ண்Nwhk. ,tthW nratJ nfhLjJfnfhzNl ,Uff dw f l T s d nfhilfis ehk ngWtjwF ekikj jFj ahff f nfhsSk fUt ahf n[gk mikf dwJ. MfNt ehk njhlheJ n[gk nraa Ntz Lk. ck mbahd d kdjij kf or nraAk: vd jiytNu, ckik Nehff vd cssjij caHjJf dNwd. Vnd d y vd jiytNu, eH eyytH: kdd ggtH: ckik Nehff kdwhLk midtUfFk NgudG fhlLgtH. Mz l tNu› vd Ntz LjYfFr nrt nfhLk: ck cjt ia ehLk vd Fuiyf Nf l lUSk. vd Jdgehs y ckik Nehff kdwhLf dNwd: eUk vdfFg gj y s ggH. j Ugghly 86: 4-7

ve;j ei ya y;n[gk;nra;aNt z;Lk;? Koe;jhsgba l L? i f $gg?

t t y a jj y kffs n[gk nraAk NghJ gyNtW e iyfs y n[g f f dwijf fhz f Nwhk. e dWnfhz L› iffis caHjj› ftoeJ› clfhheJ› Koejhsgba l L n[g jj Uff whhfs. vee iya Yk n[gffyhk vdwhYk Kbf dw #oe iyfs y Koejhs gba l L if $gg n[gggJ f l TS fF Kd ekJ jhorr iaAk gz itAk vLjJffhlLk tz z khf mikf wJ. vyyhtwww Fk Nkyhf cz ikahf› gagfj NahL n[gggJ cfejJ.vd jiytNu, vd ,jofisj jwejUSk: mgnghOJ› vd tha ckfFg Gfo rhwwLk. Vnd d y› gy a dhy ckik kf otff KbahJ: ehd vhggy nrYjj dhYk eH mj y ehllqnfhs tj y iy. f l T S fNfww gy nehWqf a neQrNk: f l TNs, nehWqf a› FwwK zHej cssjij eH mtkj ggj y iy. திUgghly 51:15-17

f l T s l k;ehk;nra;Ak;n[gk;r y Nt is f s y;Nf l;fggLtj y;iyNa Vd;?

f l T s ekik t l Qhdk k f f th. ahh ahUfF vdd Njit vgNghJ Njit vdgij mth mw thh. mth vgNghOJk ekfF edikNa nrathh. r yNt is f s y f l T s d j l lk kd j Qhdj jwF vlLtj y iy. MfNt f l T s ek n[gjij Nf l fhjth Nghy ekfFj njh f wJ. r yNt is f s y RaeyjNjhL n[gk nraf Nwhk. murh rhyNkhd f l T s lk Qhdjijf Nf l lhh. nghUlnrytNkh myyJ gilNah› NkYk mj fhujijNah myyJ NkYk muRfisNah Nf l fhjjhy f l T s midjijAk mtUfFf nfhLjjhh. myyJ f l T s d j l ljjwF khWgl L ek vz z qfs miktjhy ek n[gk Nf l fggLtj y iy. r y rkaqfs y ek n[gk Neubahff Nf l fgglhky NtWt jkhf e iwNtwwggLf wJ. vyyhtwww Fk Nkyhf f l T s ek n[gqfisf Nf l lUsthh vdw Moej t Rthr Kk f l T s d mdGk guhkh gGk ek tho t y e iyngWk vdw cWj ahd ekg f i fAk midjj Yk f l T s d r jjk e iwNtwwgglTk njhlheJ n[gff Ntz Lk.mtHfs kdejsuhky vgnghOJk ,iwtd lk kdwhl Ntz Lk vdgjwF ,NaR XH ctik nrhd dhH.g d MzltH mtHfs lk› NeHikaww eLtNu ,ggbr nrhd dhnudwhy› jhk NjHeJnfhz ltHfs myYk gfYk jkik Nehff f $fFuy LkNghJ f l T s mtHfSfF ej toqfhky ,Ugghuh? mtHfSfFj Jiz nraaf fhyk jhojJthuh? t iut y mtHfSfF ej toqFthH vd ehd cqfSfFr nrhyf Nwd. - Y}f fh18:1›6-8 g wF mtH mtHfis t l Lf fynyw J}uk t yf r nrdW› Koejhsgba l L› ,iwtd lk Ntz bdhH: jeijNa› ckfF t Uggkhdhy ,jJdgf f z z jij vdd l k UeJ mfwWk. MdhYk vd t Uggggb myy: ck t UgggbNa e folLk vdW $w dhH. Y}f fh 22: 41-42

mrrpIggl;l myy J kdgghlk;nra;j n[gq;fs;n[gpggjwF c fe;jjh?
,ggbjjhd n[gk nraa Ntz Lk vdw tpjpKiwfisக் flTs ekkplk vjpHghrf f tpyiy. mrrplggll myyJ mDjpdk ehk mwpej n[gqfisg gadgLjJtJ n[gk nraa cjtpnraAkhdhy gadgLjjyhk. vLjJffhllhf fhjjh fwgpjj n[gk› kqfs thhij n[gk› njhpej rqfjqfis n[gpggJ myyJ ghLtJ rpwej n[gk. mrrplggll n[gqfis n[gpfFk NghJ flfl ntd xggpffhky› nghUS zheJ kd <LghlLld n[gpggJ NkdikfFhpaJ. (vLjJffhlL, ghpRjj Mtpahdth n[gk). NkYk eqfs ,iwtdplk Ntz LknghOJ gpw ,djjtiug Nghyg gpjww Ntz lhk: kpFjpahd nrhwfis mLffpf nfhzNl Nghtjhy jqfs Ntz Ljy Nflfgglk vd mtHfs epidffpwhHfs. eqfs mtHfisg Nghy ,Uff Ntz lhk. Vndd dpy eqfs NflFk Kdd Nu cqfs Njitia cqfs jeij mwpejpUffpwhH. MfNt› eqfs ,tthW ,iwtdplk NtzLqfs: tpz Zyfpyp Uffpw vqfs jeijNa› ckJ ngaH J}anjdg NghwwgngWf,.... kj 6:7-9

# தெரிந்து கொள்ளுங்கள்

★ உலகில் வாழும் விலங்குகளிலேயே மிகப்பெரியது பெண் நீலத்திமிங்கலம். இதன் நீளம் 80-90 அடி வரை இருக்கும். இது ஒரு இலட்சம் கிலோ கிராம் வரை எடை கொண்டதாக இருக்கும். இதன் உடம்பிலிருந்து 120 பேரல்கள் வரை எண்ணெய் எடுக்கிறார்கள்.

★ மீன்களின் அரசன் என் அழைக்கப்படுவது சுறா.

★ வான்கோழிகளின் பூர்விகம் அமெரிக்கா

★ சீனாவில் தான் முதன்முதலில் தங்கமீன்கள் காணப்பட்டது.

★ அழிவின் விழும்பில் நிற்கும் உயிரினமாக கண்டரியப் பட்டிருப்பது இந்திய காண்டாமிருகம். **A- பிரான்ஸிஸ் பிரபா** 11B, பொற்பை

- 1 செல் உயிரினம் - அமீபா
- 2 தலைநகரங்களைக் கொண்ட மாநிலம் - ஜம்மு காஷ்மீர்
- 3 இதயங்களைக் கொண்ட மீன் - கட்டில் மீன்
- 4 வைட்டமின்கள் உள்ள பழம் - வாழைப்பழம்
- 5 கால்களை கொண்டது - ஈ
- 7 குன்றுகளின் நகரம் - ரோம்
- 8 நூல்களின் தொகுப்பு - எட்டுத்தொகை
- 9 கோள்கள் உடையது - சூரியக் குடும்பம்
- 10 கட்டளைகள் கொண்டது - திருவிவிலியம்

- **ஆன்சி மேஹறா,** பொற்பை.

# திருச்சபைச் செய்திகள்

பேரருட்திரு. முனைவர் R.ஜோசப் ரவிபாலன்

**1. துறவிகளின் ஆண்டு**

திருத்தந்தை ஃபிரான்சிஸ் அறிவித்துள்ள துறவிகளின் ஆண்டு அல்லது துறவற வாழ்வின் ஆண்டு (The Year of Consecrated Life) நவம்பர் 30ஆம் நாள் திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறன்று தொடங்கியுள்ளது. 2016ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 2ஆம் நாள் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கோவிலில் காணிக்கையாக்கப்பட்ட நிகழ்வை நினைவுகூரும் விழாவன்று நிறைவடையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. துறவிகள் ஆண்டை முன்னிட்டு, பரிபூரண பலன் பற்றி திருத்தந்தை அறிவித்துள்ளார். இந்தச் சிறப்பு ஆண்டில் ஒப்புரவு அருட்சாதனத்தை நிறைவேற்றி, நற்கருணையைத் தகுந்த தயாரிப்புடனும், பக்தியுடனும் உட்கொண்டு, திருத்தந்தையின் கருத்துக்களுக்காக மன்றாடினால் பரிபூரண பலன் உண்டு என்று திருத்தந்தை அறிவித்துள்ளார். துறவற வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும், கிறிஸ்தவ அன்பினால் தூண்டப் பட்டு, மனமாற்றத்தைத் தேடும் பொதுநிலையினருக்கும் இந்தப் பரிபூரணப் பலன் உண்டு. இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படும் பரிபூரண பலனை உத்தரிக்கிற நிலையிலிருக்கும் ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக ஒப்புக் கொடுக்கலாம்.

திருத்தந்தை ஃபிரான்சிஸ் துருக்கி நாட்டில் மூன்று நாள் (நவம்பர் 28-30) திருத்தூதுப் பயணத்தில் இருந்தக் காரணத்தினால் துறவற வாழ்க்கை நிறுவனங்கள் மற்றும் திருத்தூது வாழ்வின் சமூகங்களின் பேராயத்தின் (Congregation for Institutes of Consecrated Life and Societies of Apostolic Life) தலைவர் கர்தினால் ஜோயாவோ பிராஸ் தெ அவிஸ் புனித பேதுரு பேராலயத்தில் நவம்பர் 30ஆம் நாள் நடைபெற்ற திருப்பலியில் தலைமையேற்று, துறவிகளின் ஆண்டைத் தொடங்கி வைத்தார். கர்தினால் தெ அவிஸ் துறவிகளின் ஆண்டின் மூன்று முக்கியமான நோக்கங்களைத் தெரிவித்தார்: 1. திருச்சபையில் குழப்பமான சூழ்நிலை இருக்கும் இந்தத் தருணத்தில் இறையழைத்தல் குறித்து மக்களுக்கு அறிவிக்க துறவற சபைகளுக்கு உதவி செய்வது; 2. இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் முடிவுற்று 50ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் நோக்கம்; 3. 'முழுமையான அன்பு' (Perfectae Caritatis) என்கிற துறவற வாழ்வைப் புதுப்பித்தல் சம்பந்தமான இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தின் தீர்மான மடல் (Decree) வெளியிடப்பட்டு ஐம்பதாம் ஆண்டின் நிறைவை அனுசரிக்கும் நோக்கம்.

2013 ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் நடைபெற்ற துறவற சபைகளின் தலைவர்களின் சங்கத்தின் 82ஆவது கூட்டத்தின் இறுதிநாளன்று 2015ஆம் ஆண்டு துறவிகளின் ஆண்டாகக் கொண்டாடப்படும் என்று திருத்தந்தை ஃபிரான்சிஸ் அறிவித்தார். கடந்த ஆண்டு (2014) ஜனவரி மாதத்தில் நடைபெற்ற பத்திரிக்கையாளர்களின் சந்திப்பின்போது, துறவிகளின் ஆண்டு பற்றி வத்திக்கான் சார்பாக விரிவான விளக்கம் தரப்பட்டது.

**2. புதிய இரண்டு இந்தியப் புனிதர்கள்**

நவம்பர் மாதம் 23ஆம் நாள் கிறிஸ்து அரசரின் பெருவிழாவன்று திருத்தந்தை ஃபிரான்சிஸ் ஆறு பேரைப் புனிதர்களாக அறிவித்தார். அந்த ஆறு பேரில் இருவர் இந்தியர்கள். அவர்கள் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. திருக்குடும்பச் சபையைச் சேர்ந்த குரியாக்கோஸ் எலியாஸ் சவாரா என்பவரும், திரு இருதயச் சபையைச் சேர்ந்த யூஃப்ரேஸியா எழுவாதிங்கல் என்பவரும்தான் அந்த இரண்டு இந்தியப் புனிதர்கள். புனிதர் பட்டம் வழங்கப்பட்ட நாளன்று, உரோமை நகரில் அமைந்துள்ள புனித பேதுரு பேராலயச் சதுக்கத்தில் குளிரையும் மழையையும் பொருட்படுத்தாமல் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்து, இந்தத் திருநிகழ்வுகளில் கலந்துகொண்டனர். புனிதர் பட்டம் பெறுபவர்கள் குறித்து ஆய்வு செய்யும் பணியை நிறைவேற்றும் பேராயத்தின் (Congregation for the Causes of Saints) தலைவர் கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ ஆறு புனிதர்களின் வாழ்க்கைக் குறிப்புக்களை சுருக்கமாகக் கூறினார். புதிதாக அறிவிக்கப்பட்ட ஆறு புனிதர்களும் இவ்வுலகில் வாழ்ந்த போது

வறியவர்களிடமும், துன்புற்றவர்களிடமும், ஆதரவற்றவர்களிடமும், மிகுந்தப் பற்றும், நெருங்கியத் தொடர்பும் கொண்டு விளங்கினர் என்பது குறிப்பிடத் தக்கது. புனிதர் பட்டம் வழங்கும் திருப்பலியைத் தலைமையேற்று நடத்தியத் திருத்தந்தை ஃபிரான்சிஸ் புதிய புனிதர்களைப் பற்றிக் கூறும்போது, இந்த ஆறு பேருமே தங்களுக்கே உரிய பாணியில் இறையரசிற்கு மிகவும் சிரத்தையுடனும், பிரமாணிக்கத்துடனும் ஊழியம் புரிந்தனர் என்றார்.

**3. அனைத்துலகக் குடும்பங்களின் மாநாட்டுக் கூட்டம்**

நவம்பர் மாதம் வத்திக்கானில் நடைபெற்ற "ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் நிறைவாக்கக் கடமைப் பட்டவர்கள்" (The Complementarity of Man and Woman) என்பது குறித்த மூன்று நாள் பன்னாட்டுக் கலந்துரையரங்கத்தில் திருத்தந்தை கலந்துகொண்டார். இந்தக் கலந்துரையரங்கத்தில் உலகின் பல்வேறு இடங்களிலிருந்து வெவ்வேறு சமயங்களைச் சேர்ந்த தலைவர்களும், அறிஞர்களும் கலந்துகொண்டனர். ஆண்-பெண் உறவை ஆய்வு செய்து, அந்த உறவின் மேன்மையை உணர்த்திடும் நோக்குடனும், மானிட சமுதாயத்தின் அடித்தளமாகிய திருமணம் மற்றும் குடும்பத்தின் முக்கியத்துவத்தைத் தெளிவாக்கும் எண்ணத்துடனும் இந்த மூன்று நாள் கலந்துரையரங்கம் நடைபெற்றது. இதைத் தொடங்கி வைத்துப் பேசியபோது, திருத்தந்தை அவர்கள் 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ஆம் நாள் முதல் 27ஆம் நாள் வரை அமெரிக்காவிலுள்ள ஃபிலடெல்பியாவில் நடைபெறவிருக்கும் அனைத்துலகக் குடும்பங்களின் மாநாட்டுக் கூட்டத்திற்குச் செல்லவிருப்பதாகக் கூறினார். இதுவே அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு அவர் மேற்கொள்ளும் முதல் திருத்தூதுப் பயணம். தற்காலத்தில் குடும்ப வாழ்வு மிகவும் பாதிப்புற்ற நிலையில் இருப்பதாகக் கூறியத் திருத்தந்தை, இளையோர்தான் வருங்காலச் சமுதாயத்தின் பிரதிநிதிகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது என்று கூறினார். இளைஞர்கள் தவறான வழியில் சென்று தங்களது வாழ்க்கையைப் பாழாக்கிவிடாமல் அவர்களைப் பாதுகாக்கும் கடமை அனைவருக்கும் உண்டு என்பதை அவர் வலியுறுத்திப் பேசினார்.

**4. கருணைக் கொலை, கருச்சிதைவு: படைத்தவருக்கு எதிரான பாவங்கள்**

இத்தாலி நாட்டுக் கத்தோலிக்க மருத்துவர்களின் கூட்டமைப்பின் எழுபதாவது ஆண்டு விழா நவம்பர் மாதம் 15ஆம் நாள் வத்திக்கானில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு பேசிய திருத்தந்தை ஃபிரான்சிஸ் உயிரை அழிக்கும் செயல்கள் மற்றவர்களுக்குச் செய்யப்படும் சேவை என்கிற தவறானக் கருத்தை மனதில் வைத்துக்கொண்டு மருத்துவர்கள் செயல்படக்கூடாது என்று அழுத்தமாகக் கூறினார். கருணைக் கொலை மற்றும் கருச்சிதைவு செய்தல் ஆகியவற்றைக் கண்டித்துப் பேசியபோது, அந்தச் செயல்கள் யாவும் நம்மைப் படைத்தக் கடவுளுக்கு எதிரானப் பாவங்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டினார். மக்களிடையே ஒரு தவறான கருத்து இருந்து வருகிறது. அதாவது, கருணைக்கொலை செய்வதின் மூலம் துன்பப்பட்டு, அலைக்கழிக்கப்படும் முதியவர்கள் கௌரவமான முறையில் இறந்து போவதற்கு நாம் உதவி செய்கிறோம் என்றும், கருச்சிதைவு செய்துகொள்வதின் மூலம் பெண்களுக்கு உதவி புரிகிறோம் என்றும் பொதுவாகப் பொய்ப் பிரச்சாரம் செய்யப்படுகிறது. ஆனல் இதெல்லாம் 'தவறான கருணை' (False Compassion) என்று அவர் சுட்டிக்காட்டினார். அதற்கு மாறாக, நற்செய்தி நமக்கு எடுத்துச் சொல்லும் கருணைதான் மிகவும் சரியானது என்றும் அவர் கூறினார். ஒரு குழந்தையை அறிவியல் ஆய்வுக்கூடத்தில் உருவாக்குவதைப் பெரும் சாதனையாகக் கருதி, அச்செயல் சரியானது தான் என்று கூறுவதும், புதிதாகக் கண்டுப்பிடிக்கும் மருந்துகள் எவ்வாறு பலனளிக்கும் என்பதைச் சோதித்து அறிவதற்கு, மனிதர்களை அறிவியல் ஆய்வுக்கூடத்தில் பயன்படுத்துவதும் மிகவும் தவறான அணுகுமுறை என்று திருத்தந்தை எடுத்துச் சொன்னார். மருத்துவப் பணி மிகவும் கௌரவமிக்கதும், முக்கியமானதும் ஆகும் என்பதைச் சுட்டிக்காட்டியத்

திருத்தந்தை, எல்லா உயிர்களும் முக்கியமானவை என்பது மட்டுமல்ல, அவை புனிதமானவையும்கூட என்றும் அவர் அவர்களுக்கு நினைவூட்டினார். தங்களிடம் வருகிற நோயாளிகளிடம் நல்ல சமாரியனைப்போல நடந்துகொள்ள வேண்டும் என்று திருத்தந்தை அவர்களுக்கு அறிவுரை கூறினார்.

**5. திருத்தந்தையின் மிகக் குறுகிய நேரப் பன்னாட்டுப் பயணம்**

திருத்தந்தை ஃபிரான்சிஸ் திருச்சபையின் தலைவராகப் பொறுப்பேற்றபின் தன் ஐந்தாவது பன்னாட்டுப் பயணமாக ஃபிரான்ஸ் நாட்டிலுள்ள ஸ்ட்ராஸ்பூர்க் என்கிற இடத்திற்கு நவம்பர் மாதம் 25ஆம் நாள் சென்றார். திருச்சபையின் வரலாற்றில் திருத்தந்தையர்கள் மேற்கொண்ட பன்னாட்டுப் பயணங்களில் இந்தப் பயணம்தான் மிகக் குறுகிய நேரம் கொண்டது. இந்தப் பயணத்தின்போது அவர் மொத்தத்தில் மூன்று மணி ஐம்பது நிமிடங்கள் மட்டும்தான் தரையில் இருந்தார். அன்று காலை 10 மணிக்கு அவர் ஸ்ட்ராஸ்பூர்க் விமான நிலையத்தில் இறங்கினார். மதியம் 1.50 மணிக்கு அங்கிருந்து உரோமைக்குப் புறப்பட்டார். இந்தப் பயணத்தின்போது மேய்ப்புப்பணி, சமயப்பணி மற்றும் வழிபாடு சம்பந்தப்பட்ட எந்த நிகழ்வுகளிலும் திருத்தந்தை கலந்துகொள்ளவில்லை. ஐரோப்பிய நாடுகளின் பொது நிறுவனங்களின் அழைப்பை ஏற்று, மரியாதைக்காகத்தான் திருத்தந்தை இந்தப் பயணத்தை மேற்கொண்டார்.

அவர் சென்ற இடம் ஃபிரான்ஸ் நாட்டின் நகரங்களுள் ஒன்று. ஆனால் அவர் தன் பயணத்தை ஐரோப்பியப் பயணமாக மட்டுமே ஏற்படுத்திக் கொண்டார். ஃபிரான்ஸ் நாடு சம்பந்தப்பட்டப் பயணமாக இதை அவர் பயன்படுத்திக்கொள்ளவில்லை. எந்த அளவுக்கு என்றால், ஸ்ட்ராஸ்பூர்க் நகரத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஆசனப் பேராலயத்தின் (Cathedral) ஆயிரமாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிக்கொண்டிருக்கிற இந்த வேளையில் அந்த நகரத்தின் பேராயர் தன் ஆசனப் பேராலயத்திற்கு வருமாறு திருத்தந்தையை அழைத்தபோது, அந்த அழைப்பை திருத்தந்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஃபிரான்ஸ் நாட்டு அதிபர் ஃபிரான்சிஸ் ஹாலந்த் அவரை வந்து வரவேற்கவில்லை. மாறாக, ஐரோப்பிய சம்பந்தமான காரியங்களுக்கான இராஜாங்க அமைச்சர் ஹார்லெம் தெஸீர் என்பவர்தான் அவரை வரவேற்றார். இது திருத்தந்தையின் விருப்பத்தின் அடிப்படையில்தான் நிகழ்ந்தது. ஃபிரான்ஸ் நாட்டில் எந்த இடத்திலும் திருத்தந்தை நிற்கவில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்தில் (European Union) மொத்தம் 28 உறுப்பு நாடுகள் உள்ளன. அந்த நாடுகளிலுள்ள 50.8 கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 751 உறுப்பினர்களைக் கொண்ட ஐரோப்பியப் பாராளுமன்றத்திற்குச் சென்று, அவர்கள் மத்தியில் பேசினார். அங்கிருந்து அவர் ஐரோப்பியப் பேரவைக்குச் (European Council) சென்று உரை நிகழ்த்தினார். ஸ்ட்ராஸ்பூர்க் நகரத்தில் குறுகிய நேரம்தான் இருந்தார்; இரண்டே இடங்களில்தான் உரையாற்றினார். இருப்பினும் அவர் ஒட்டுமொத்த ஐரோப்பாவிடமே பேசினார் என்று எடுத்துக்கொள்ள முடியும்.

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

## தொடர்பு கொள்ளுங்கள் ?04639?261230 , 261330, 261430

**06?12?2014 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | ? | 927 பேர் |
| குழந்தைபாக்கியம் | ? | 793 பேர் |
| சுகப்பிரசவம் | ? | 642 பேர் |
| நற்சுகம்பெற | ? | 896 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | ? | 575 பேர் |
| தேவஅழைத்தல் | ? | 323 பேர் |
| வேலைகிடைக்க | ? | 1240 பேர் |
| தொழில்முன்னேற்றம் | ? | 978 பேர் |
| குடும்பசமாதானம் | ? | 852 பேர் |
| குடும்பநலன் | ? | 579 பேர் |
| உறவினர்நன்மைக்காக | ? | 394 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | ? | 575 பேர் |
| அலகைதொல்லைதீர | ? | 843 பேர் |
| மனஅமைதிக்காக | ? | 1311 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | ? | 743 பேர் |
| மனமாற்றமடைய | ? | 834 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | ? | 1290 பேர் |
| நல்லஇல்லம்அமைய | ? | 450 பேர் |
| சோதனைகளைவெல்ல | ? | 523 பேர் |
| கடன்தொல்லைதீர | ? | 1573 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | ? | 475 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** ?பங்குத்தந்தை

**உங்கள் ஜெப உதவிக்கு எங்கள் இணையதள முகவரி :kalyanamatha@gmail.com**

திருக்கல்யாண மாத இதழின் சந்தாதாரர்களில் பெரும்பாலான சந்தாதாரர்கள் வரும் டிசம்பர் மாதத்துடன் முடிவடைவதால் தாங்கள் தங்கள் சந்தாக்களை ஜனவரி முதல் புதுப்பிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம். சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவைப் புதுப்பிக்க வரும்போது தங்கள் முகவரியுடன் இணைக்கப்பட்டுள்ள பதிவு எண்ணையும் எடுத்துவரும்படி கேட்டுக்கொள்கிறோம். சந்தாவை புதுப்பிக்காத வர்களுக்கு மாத இதழ் அனுப்புவது நிறுத்தப்படும்.


**திருக்கல்யாணத்தாய் மாத இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்!**

கருப்பு வெள்ளை முழுப்பக்கம் - ரூ.1000/-    கலர் முழுப்பக்கம் - ரூ.2500/-

தொடர்புக்கு :

**திருத்தல அதிபர்**

திருக்கல்யாண மாதா திருத்தலம்

பொத்தக்காலன்விளை 628 702 தூத்துக்குடி மாவட்டம்,

தமிழ்நாடு தொலைபேசி : 04639 - 261230, 261330, 261430

# கவிதைச் சோலை

கடுங்குளிரில் கர்த்தரை
கனிவாக அவதரித்து
குவலயம் மீட்டிடவே
குன்றா விளக்கானாய்.
எளிமையின் ரூபத்தை
எழிலாக ஏற்று
பெண்களுக்குள் பெருமை
பெற்ற நீர் வாழ்க!

- D.ஜோஸ்பின் மேரி தாசன்
கவரப்பேட்டை

## தமிழர் வேதங்கள்

தமிழ் மறை எனப்படுவது திருக்குறள்.
தமிழர் வேதம் எனப்படுவது
திருமந்திரம்.
தமிழர் வரலாற்றுக் களஞ்சியம்
எனப்படும் நூல் புறநானூறு.
தமிழ்த்தாத்தா என அழைக்கப்படுவர்
உ. வே.சாமிநாதய்யர்
தமிழிசையின் தந்தை
அண்ணாமலைச் செட்டியார்
தமிழிசைக்காவலர் ராஜா சர்
முத்தையா செட்டியார்.

ஜாக்குலின்
வெள்ளக்கோவில்

## வணங்குகிறோம் தாயே

பொற்பை புகழரசி புனித மாதரசி
எம் முயிர்த்தாயே!
இன்னுயிர் மரியே
தரணி போற்றும் பரணி பாய்ந்த
பொற்மை மாதரசி புனித புகழரசி
நம்-நாடி நரம்புகளில்
இரத்த நாளங்களில்
ஊனில் கலந்திட்ட உயிரே
உணர்வில் ஒன்றிட்ட ஒளியே
பசித் தோர்க்கு அசனவிருந்து-நீ
பாவம் போக்கும் அருமருந்து
நான்-பேசுகிற பேச்சிலும்
விடுகின்ற மூச்சிலும்
வீசுகின்ற காற்றாய்
விளங்கிடும் தாயே!
இருமனத்தை ஒருமனமாக்கி
இணைக்கின்ற அன்னையே
நம்-மெய்யகம் மேன்மைபெற
வையகம் வாழ்வு மிளிர
வணங்குகிறோம் தாயே
வாழ்வாக்கு வாழவைப்பீர் எம்மையே

-அருள்ராஜ், பாளை

### தெரிந்து கொள்வோம்

திருக்குறள் முதல்முதலில் 1812-ம்
ஆண்டில் அச்சிடப்பட்டது.
திருக்குறளுக்கு முதல்முதலில் உரை
எழுதியவர் மணக்குடவர்.
திருக்குறளை 40 பேர் ஆங்கிலத்தில்
மொழி பெயர்த்துள்ளனர்.
முதல்முதலில் குறளை
வேற்றுமொழியில் மொழி பெயர்த்தவர்
வீரமாமுனிவர். - ஜெசிகா, வெள்ளக்கோவில்

## சிந்தனைத் துளிகள்

நல்விதையே முளைக்கும்
நல்நினைவே ஜெயிக்கும்
கோபம் அன்பை அறிவதில்லை
அன்பு கோபம் அறிவதில்லை.
தோல்வி கவனத்தைக் கற்றுத் தருகிறது
கவனம் வெற்றியைக் கற்றுத் தருகிறது.
பேச அஞ்ச வேண்டாம்
பேச்சில் நஞ்சு வேண்டாம்.
கண்ணற்றவனுக்கு பார்வைதான்
கிடையாது
கவலையுற்றவனுக்கு வாழ்க்கையே
கிடையாது.

- சகாயஸ்மைலின்,பொற்பை

திருமண வரம் மற்றும் குழந்தை வரம் வழங்கும்

# புனித திருக்கல்யாண மாதா திருத்தலத்தின்

# 102 ஆவது தேரோட்டத் திருவிழா அழைப்பிதழ்

**கொடியேற்றம்**
14.01.2015
புதன்கிழமை



**திருவிழா**
23.01.2015
வெள்ளிக்கிழமை

## 14 ஜனவரி 2015 புதன்

**1 ஆம் திருவிழா**

**நம்பிக்கைக்குரிய திருக்கல்யாண அன்னை**

காலை 5.30மணி: திருப்பலி

காலை 6.30மணி: திருயாத்திரைத் திருப்பலி

சிறப்பிப்போர் : புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியர் ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள்

தலைமை : அருட்திரு. மார்ட்டின்
(பங்குத் தந்தை,பூச்சிக்காடு)



மாலை 6.30மணி: புனித மிக்கேல் திருவுருவப் பவனி,
கொடியேற்றம், மறையுரை,திவ்ய நற்கருணைஆசீர்

தலைமை : அருட்திரு.முனைவர் T. சேவியர் டெரன்ஸ், Ph.D.
(பேராசிரியர், புனித பவுல் குருத்துவக் கல்லூரி, திருச்சி)

கலைநிகழ்ச்சிகள் : புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளியின் ஆண்டு விழா

**2 ஆம் திருவிழா**

ன்னை

யினர் மற்றும்

ரன்ஸ்,Ph.D.

கல்லூரி, திருச்சி)

ணை ஆசீர்

தந்தை, கொழுந்தட்டு.

ரின் கலைநிகழ்ச்சிகள்

**3 ஆம் திருவிழா**

அன்னை

டக்கப்பள்ளி மற்றும்

கப்பள்ளி

த,தட்டார்மடம்)

ஆசீர்

ு)

ளி மற்றும் புனித

ஆண்டு விழா

**4 ஆம் திருவிழா**

ன்னை

தந்தை, உவரி)

ண ஆசீர்

கலைநிகழ்ச்சிகள்

## 18 ஜனவரி 2015 ஞாயிறு

**5 ஆம் திருவிழா**

### இல்லறத்தில் உதவிக்கரம் நீட்டும் அன்னை

காலை 5.30மணி: திருப்பலி

காலை 6.30மணி: திருயாத்திரைத் திருப்பலி

சிறப்பிப்போர் : திருக்குடும்ப சபையினர், புனித மரியாயின் சேனையினர் மற்றும் அனைத்துப் பெண்கள்

தலைமை : அருட்திரு.Y.D. ராஜன்
(இயக்குனர், ஹெலன் ஃப்ளாரிற்றி மாற்றுத் திறனாளிகள் நல வாழ்வு மையம், தெற்கு கள்ளிகுளம்)

மாலை 6.30மணி: மறையுரை, திவ்ய நற்கருணை ஆசீர்
பேரருட்திரு. முனைவர். ஜோமிக்ஸ்
(பாளையங்கோட்டை மறைமாவட்ட முதன்மைக்குரு)

கலைநிகழ்ச்சிகள் : கிராமத்து சதங்கைகள், திண்டுக்கல் சக்தி கலைக்குழுவினர்

## 19 ஜனவரி 2015 திங்கள்

**6 ஆம் திருவிழா**

### துறவறத்தில் தூய்மையை விரும்பும் அன்னை

காலை 5.30மணி: திருப்பலி

காலை 6.30மணி: திருயாத்திரைத் திருப்பலி

சிறப்பிப்போர் : பங்கு மேய்ப்புப் பணிக் குழு மற்றும் திருவிழா பணிக் குழுக்கள்

தலைமை : அருட்திரு. ஜோசப் ஸ்டார்லின்
(உதவி பங்குத் தந்தை, தெற்கு கள்ளிகுளம்)

மாலை 6.30மணி: மறையுரை, திவ்ய நற்கருணை ஆசீர்
அருட்திரு. ஐஸ்டின்
(பங்குத் தந்தை, அடைக்கலாபுரம்)

கலைநிகழ்ச்சிகள் : திருச்சி கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரியின் அன்பின் அபிநயங்கள் என்கிற கலைநிகழ்ச்சி

## 20 ஜனவரி 2015 செவ்வாய்

**7 ஆம் திருவிழா**

### உறவை வளப்படுத்தும் அன்னை

காலை 5.30மணி: திருப்பலி

காலை 6.30மணி: திருயாத்திரைத் திருப்பலி

சிறப்பிப்போர் : புனித தொன் போஸ்கோ இளைஞர் சபையினர்
புனித செபஸ்தியார் நாடகக் குழுவினர் மற்றும் அனைத்து இளைஞர்கள்

தலைமை : அருட்திரு. ராபின் ஸ்டான்லி
(உதவி பங்குத் தந்தை, புனித யாகப்பர் ஆலயம், மணப்பாடு)

காலை 11.00மணி: திருப்பலி (நான்கு சந்தி சிற்றாலயம்)
அருட்திரு. கிராஸிஸ் (பங்குத் தந்தை, ஜீவா நகர்)

மாலை 6.30மணி: பாவ மன்னிப்பு வழிபாடு, ஒப்புரவு அருளடையாளம்
(பாவசங்கீர்த்தனம்) மறையுரை,திவ்ய நற்கருணை ஆசீர்
: அருட்திரு. ரியோசில் பெப்பி (பங்குத் தந்தை, புனித ஒத்தாசை மாதா ஆலயம், ஏரல்)

கலைநிகழ்ச்சிகள்: புனித தொன் போஸ்கோ இளைஞர் சபையினரின் கலைநிகழ்ச்சிகள்

## 21

இறை

காலை 5.30மணி

காலை 6.30மணி

சிறப்பிப்போர்

தலைமை

நண்பகல்12.00

மாலை 6.30மணி

தலைமை

மறையுரை

## 22

காலை 5.30மணி

காலை 7.00மணி

சிறப்பிப்போர்

நண்பகல் 12.00

மாலை 6.30மணி

இரவு 8.30மணி

தலைமை &

மறையுரை

# 23 ஜனவரி 2015 வெள்ளி

## 10ஆம் திருவிழா

## தாய்மை வரம் அருளும் திருக்கல்யாண அன்னை

காலை 5.30மணி: தேர்ன் முன் திருப்பலி ,அருட்திரு. ஜான் போஸ்கோ
(பங்குத் தந்தை, நொச்சிக்குளம்)

காலை 7.00மணி: **பெருவிழாத் திருப்பலி**

சிறப்பிப்போர் : புது நன்மை பெறும் சிறுவர் சிறுமியர்,அன்னையின் அனைத்துலக பக்தர்கள்

தலைமை : மேதகு ஆயர் இவோன் அம்புரோஸ் D.D.,Ph.D
தூத்துக்குடி மறைமாவட்டம்.



நண்பகல்12.00மணி: மலையாளத் திருப்பலி
அருட்திரு. மால்பின் சூசை

மாலை 5.30மணி: **திருக்கல்யாண அன்னையின் 102 ஆவது அதிசய தேர்ப்பவனி,** திவ்ய நற்கருணை ஆசீர்

குறிப்புகள் :

1. நவநாள்களில் தினமும் காலை 5.30 மணிக்கு முதல்திருப்பலியும், 6.30 மணிக்கு திருயாத்திரைத் திருப்பலியும் நடைபெறும்.
2. 7ஆம் திருவிழா அன்று மதியம் 2.30 மணியிலிருந்து மாலை 6.30 மணி வரை ஊரின் அனைத்து வீதிகளின் வழியாக புனித செபஸ்தியார் சுரூபப்பவனி நடைபெறும்.
3. 9ஆம் திருவிழா அன்று காலை 10.00 மணிக்கு ஞானஸ்நானம் வழங்கப்படும்.
4. 10ஆம் திருவிழா அன்று தூத்துக்குடி மறைமாவட்ட ஆயரின் தலைமையில் நடைபெறவிருக்கும் திருவிழா கூட்டுத்திருப்பலியில் புது நன்மை வழங்கப்படும்.
5. **24,25,26.1.2015** ஆகிய மூன்று நாள்களிலும் இரவு 8.30மணிக்கு புனித செபஸ்தியார் நாடகம் நடத்தப்படும். அந்த மூன்று நாள்களிலும் மாலை 6.30மணிக்கு திருக்கல்யாண மாதா தேரின் முன் திருப்பலி நிறைவேற்றப்படும்.
6. **24.1.2015** மாலை நன்றித் திருப்பலிக்குப்பின் திருவிழா அசனம் நடைபெறும்.
7. **21,22,23.1.2015** ஆகிய மூன்று நாள்களிலும் நண்பகல் 12.00 மணிக்கு மலையாளத்தில் திருப்பலி நடைபெறும்.
8. மூன்றாம் நாள் புனித செபஸ்தியார் நாடகத்தின் நிறைவில் திருக்கல்யாண அன்னையின் புனித கொடியிறக்க நிகழ்ச்சி நடைபெறும்.
9. திருவிழா நாள்களில் இறைமக்கள் அனைவரும் ஒப்புரவு அருளடையாளத்தை நிறைவேற்றி, எல்லா வழிபாட்டு நிகழ்வுகளிலும் பக்தியுடனும்,ஆர்வத்துடனும்,முழுமன ஈடுபாட்டுடனும் கலந்துகொண்டு,திருக்கல்யாணத்தாயின் சிறப்புப் பரிந்துரையின் மூலம்இறைவனின் ஆசீரைப் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தொடர்புக்கு...


திருத்தல அதிபர் தந்தை
திருக்கல்யாண மாதா திருத்தலம்,நொச்சிக்குளம் - 628 702
சாத்தான்குளம் தாலுகா,தூத்துக்குடி மாவட்டம். தொலைபேசி: 04639-261280

திருத்தல அலுவலகம் :
தொலைபேசி: 04639-261430
திருத்தல புனிதப் பொருள்கள் விற்பனையகம்
தொலைபேசி: 04639 261330.

திருக்கல்யாண மாதா
திருவிழா நல்வாழ்த்துக்கள்!



RAJ CONSTRUCTION & MOVERS

*(Specialist in all kinds of Civil Engineering & Mechanical Earth Works)*

OFFICE :
**17, NEHRU NAGAR, ARUMBAKKAM,**
**CHENNAI - 600 106**
**Ph : 23635688, Cell : 94441 51369, 98840 48877**
**Email : humjose@gmail.com**

**PROPRIETOR :-**

V.R.A.JAYARAJ, R.JOSE

**(P.W.D. Contractors)**


திருமண வரம் & குழந்தை வரம் தரும்
திருக்கல்யாண மாதா திருத்தல 102 வது
தேரோட்ட பெருவிழா
கொடியேற்றம்
14.01.2015
புதன் கிழமை
பெருவிழா
23.01.2015
வெள்ளிக்கிழமை
சென்னை வாழ் பொற்பை நகர் மக்கள் நலச் சங்கம்
பதிவு எண்: 239 / 2008
10, நேரு நகர், அரும்பாக்கம், சென்னை - 106
போன் : 044 - 23635688

# திருக்கல்யாண மாதா
# திருவிழா நல்வாழ்த்துக்கள்!

## சாஸ்தாவி நல்லூர் தொடக்க வேளாண்மைக்
## கூட்டுறவு கடன் சங்கம்

பொத்தக்காலன்விளை



R.சூசை செசன்ராஜ்





மா. இரவிச்சந்திரன்



வெ.அருள்ராஜ்



பா.கிறிஸ்டோபர்



செ.ஆபிரகாம்



ஏ.இருதயராஜ்



த.ரஞ்சிதம்



லெ.ஜானகி



சி.திருக்கல்யாணி



செ.இந்திராவதி



லீ.முத்துலெட்சுமி

திருமண வரம் & குழந்தை வரம் தரும்

# திருக்கல்யாண மாதா திருத்தல
# பெருவிழா







**கொடியேற்றம்**
**14.01.2015**
**புதன் கிழமை**

**பெருவிழா**
**23.01.2015**
**வெள்ளிக்கிழமை**

**அனைவருக்கும் திருவிழா நல்வாழ்த்துக்கள்....**

## V.E. KAMARAJ
Managing Director

**Cell : 094440 59848**

Office :
Behind Minnie Motors
2nd Floor, Ashoka Nagar,
Tumkur - 572 101
Ph : 0816 - 2251599,
0816 - 2251699

Works :
Plot No. 366, KIADB
Industrial Growth Centre
Holenalasupura Road
Hassan - 573201
Karnataka
**Email : merlynhcpl@yahoo.com**

# VSR INTERNATIONAL SCHOOL (CBSE)

Kalyani Nagar, Idaiyangudi Road, Tisaiyanvilai.

**Pre-KG to Std. VIII**




## NEW YEAR SPECIAL ADMISSION

**Date : January 5th to 10th**

அதிக அளவிலான பெற்றோர்கள் வேண்டுகோளின்படி ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு, ஜனவரி 5-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை சிறப்பு அட்மிஷன் நடைபெறுகிறது. ஒரு வகுப்பிற்கு 25 மாணவ, மாணவியர் மட்டுமே சேர்க்கப்படுகிறார்கள். எனவே முந்துபவர்களுக்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கப்படும். கல்விக்கட்டணம் இதர பள்ளிகளை விட மிக மிக மிக குறைவாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## பள்ளியின் சிறப்பம்சங்கள்

- A/C வசதியுடன் கூடிய வகுப்பறைகள்/பேருந்துகள்
- மதிய உணவு (சைவம் மற்றும் அசைவம்), (Optional)
- 25 மாணவர்களுக்கு 1 ஆசிரியர் (25:1)
- ஆங்கிலோ-இந்தியன் ஆசிரியர்கள் மற்றும் Ph.D. பட்டம் பெற்ற அனுபவமுள்ள ஆசிரியர்களை கொண்டு பயிற்சி
- மூன்றாம் மொழியாக ஹிந்தி / சமஸ்கிருதம்
- கூடைப்பந்து / ரோலர் ஸ்கேட்டிங் / குதிரையேற்றம்
- தபேலா, கிதார், கீபோர்ட், வயலின் போன்ற இசைக் கருவி பயிற்சிகள்
- யோகா மற்றும் தியான பயிற்சிகள்
- மினி கால்பந்தாட்ட மைதானம்
- புல்வெளியுள்ள டென்னிஸ் மைதானம்
- உலகத்தர நீச்சல் குளத்தில் திறமையான நீச்சல் பயிற்சி
- குழந்தைகளுக்கான பிரத்யேக சிறப்பு விளையாட்டு உலகம்







விபரங்களை தெரிந்து கொள்ள : **Ph.: 04637-272 067, 272 068**

அருள்தரும் இமயம்

திருமண வரம் & குழந்தை வரம் தரும்

# திருக்கல்யாண மாதா திருத்தல பெருவிழா



**கொடியேற்றம்**
**14.01.2015**
**புதன் கிழமை**

**பெருவிழா**
**23.01.2015**
**வெள்ளிக்கிழமை**

“எண்ணம் அழகானால் எல்லாம் அழகாகும்”

## திருவிழா நல்வாழ்த்துக்கள்!



என்றும் மக்கள் பணியில்...

**சூ. மரிய அந்தோணி ஜார்ஜ் M.Sc.,M.Phil.,LLB.,**

பஞ்சாயத்துத் தலைவர்,
சாஸ்தாவிநல்லூர் ஊராட்சி,
பொத்தக்காலன்விளை.




CSC COMPUTER EDUCATION


**Main Road,Sathankulam -628704**
**Ph : 04639 267284**

திருமண வரம் & குழந்தை வரம் தரும்

# திருக்கல்யாண மாதா திருத்தல பெருவிழா

**கொடியேற்றம்**
14.01.2015
புதன் கிழமை

**பெருவிழா**
23.01.2015
வெள்ளிக்கிழமை



**with best compliment from**

Thirukalyana Matha Mini Bus Service,
PothakalanVilai ( V.Arul Raj )
Mirlyn Hydrocarbons Pvt.ltd, karnataka
Merlyn Groub
( T.Jagatheesh Chandra Bose - J.M.Rexlin Jeva,
J.Jesika, J.Joovin )
Hydrocarbons, karnataka,
Jesi Petroleum, karnataka
J.J. Petroleum, chennai,
Merlyn Transport, chennai, karnataka
Annai Transport, chennai, ( Er.T.Jegathees Babu)
Annai Earth Movers, chennai, ( T.Jayasingh )
Matha Transport, chennai
( M.kristobar dennis )



**திருக்கல்யாணத்தாய் ஆகாய பேலஸ் (A/C, Non-A/C )**

திருப்பயணிகளின் வசதியை முன்னிட்டு சகல வசதிகளுடன்
கூடிய தங்கும் அறைகள் (A/C, Non-A/C)
அனைத்து நாட்களிலும் வாடகைக்கு கிடைக்கும்.

திருமண வரம் & குழந்தை வரம் தரும்

# திருக்கல்யாண மாதா திருத்தல
# பெருவிழா



அனைவரையும்
அன்புடன் அழைக்கும்...

**A.V.M. GROUPS - 94442 16566**

**A.V.M. STORES - 2792 5254**

**A.V.M. HARDWARES - 94442 16566**

**MATHA STORES - 2792 5698**

**A.V.M. WATER SUPPLY - 27925632**

PROPRIETOR :-
**D.DASAN & BROS**
**D.DASAN & SONS**

OFFICE :
A.V.M BUILDINGS
G.N.T. ROAD, KAVERA PETTAI

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்
-யோவா 11:25

# இதய அஞ்சலி

தோற்றம்
15.06.1979



மறைவு
14.01.2006

# A. உபகார வென்சி மலர்

## என்றும் நினைவில் வாழும்

**சகோதரர்கள்**
A.மரியதுரை-கனகா
A.அந்தோனி சுதாகர்
A.யோகராஜ் – ஆனந்தி

**சகோதரிகள்**
R.ஜான்ஸி – ராஜன்
A.புனிதா லூக்காஸ்

**மற்றும் உற்றார் உறவினர்கள்**

# இதய அஞ்சலி



## I. அன்னத்தாய் அம்மாள்

விழியோரம் கசியும் கண்ணீர் துளிகள்
உறவுகளை மட்டுமல்ல உள்ளத்தையும்
ஒரு நொடி மௌனமாக்கும்...
நீங்கள் எங்களை விட்டு
பிரிந்தாலும் உங்கள் நினைவுகள்
என்றும் பிரிவதில்லை....

**என்றும் உங்கள்**
**நினைவில் வாழும்**

**அன்பு மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

# எளிய உள்ளம்

நம் வானகத் தந்தையாம் இறைவன் அவர்பிள்ளைகளாகிய நம்மிடம் எதிர்பார்க்கும் நற்குணங்களில் ஒன்று எளிய உள்ளம். பெருமை நிறைந்த உள்ளத்தை அவர் விரும்பவில்லை. ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது (மத் 5:3). தம்மைத் தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப் பெறுவர் தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர் (லூக் 14:11) (18:14) பொதுவாக மனிதமனம் தற்பெருமையினால் நிறைந்திருப்பதே இயற்கை குணமாகும். தனது உருவத்தோற்றம், தனது பதவி, தனக்குள்ள செல்வச் செழிப்பு, தனது ஆற்றல் என பல காரணங்களால் நமது மனம் மற்றவர்களைக் காட்டிலும் தன்னை மேலானவராக நினைப்பது வழக்கம். கடவுள் வெறுக்கும் குணம் இறுமாப்பு (நீதி.மொ.16:17)இறுமாப்பு உள்ளவர் யாராயிருந் தாலும் அவரை ஆண்டவர் அவருக்கிறார். (நீதி 16:5) அழிவுக்கு முந்தியது அகந்தை. வீழ்ச்சிக்கு முந்தியது வீண் பெருமை.(நீதி 16:18) எனவே உங்களுக்கு இருக்க வேண்டியது உயர்வு மனப்பான்மை அல்ல.அச்ச உணர்வே (ரோமர் 11:20). ஆண்டவர் உன்னதத்தில் உறைபவர் எனினும் நலிந்தோரைக் கண்ணோக்குகின்றார். செருக்குற்றோரைத் தொலைவிலிருந்தே அறிந்து கொள்கிறார். (தி.பா.138:6) செருக்குற்றோரை அவர் இகழ்ச்சியுடன் நோக்குவார்.தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார் (நீதி 3:34). எனவே ஒருவர் மற்றவரோடு பழகும் போது எல்லாரும் மனத்தாழ்மையை ஆடையாய் அணிந்திருக்க வேண்டும். அவருடைய வல்லமை மிக்க கரத்தின் கீழ் நம்மைத் தாழ்த்துவோம். அப்பொழுது அவர் ஏற்ற காலத்தில் நம்மை உயர்த்துவார் (1 பேதுரு 5:5,6) தம்மைத் தாழ்த்தியபடியால் இறையாசீரைப் பெற்ற பல எடுத்துக்காட்டுகளை நாம் விவிலியத்திலே காணலாம்.நமது ஆண்டவராம் இயேசு கிறிஸ்து வானகத் தந்தையின் ஏக மைந்தனாக இருந்தபோதிலும் தன்னையே வெறுத்து, அடிமையின் உருவாகி, ஏழைத் தச்சரின் மகனாக மாட்டுக் கொட்டிலிலே பிறந்தார். பாவமே இல்லாத அவர் நமக்காக நமது பாவங்களை தன்மீது ஏற்றுக்கொண்டு சிலுவையில் பலியாக தம்மையே கையளித்தார்.அன்னை மரியும் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார்.வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்.தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்.பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார். (லூக் 1:48,50-53)என மனத்தாழ்மையுடன் கூறி செபிக்கிறார்.பரிசேயரும்,வரிதண்டுவோரும் இறைவனிடம் வேண்ட கோவிலுக்குச் சென்றனர்.அங்கே பரிசேயர் தன்னை உயர்த்தினார். வரிதண்டுவோரோ வானத்தை அண்ணாந்து பார்க்கக் கூடத் துணியாமல் மார்பில் அடித்துக் கொண்டு கடவுளே! பாவியாகிய என்மீது இரங்கியருளும் என்றார். அவரே கடவுளுக்கு ஏற்புடையவராக வீடு திரும்பினார் (லூக் 18:9-14) ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்க வேண்டும் (மாற்கு 10:35). நூற்றுவர் தலைவனும் இயேசுவிடம் ஐயா-நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். ஒரு வார்த்தை மட்டும் சொல்லும் என் பையன் நலமடைவான்-என தன்னைத் தாழ்த்தி வேண்டிக் கொள்கிறார். (மத் 8:8).கானானியப் பெண் பேய்பிடித்த தன்மகளைக் குணமாக்க வேண்டி,இயேசுவிடம் கெஞ்சியபோது அவர் பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல என்றார். உடனே அப்பெண் ஆம். ஐயா,

ஆனாலும் தங்கள் உரிமையாளரின் மேசையிலிருந்து விழும் சிறு துண்டுகளை நாய்க்குட்டிகள் தின்னுமே என்று தன்னைத் தாழ்த்தினாள். வேண்டிய வரத்தைப் பெற்றுச் சென்றாள் (மத் 15:26-27) தூய பேதுருவும் இயேசுவிடம் ஆண்டவரே.நான்பாவி. நீர் என்னை விட்டுப் போய்விடும் என்று கூறி தன்னைத் தாழ்த்தியபடியால் சீடர்களில் முதல் இடத்தைப் படித்தார். (மத்5:8).தூய பவுலடிகளாரும் தாம் தீமோத்தேயூவுக்கு எழுதிய திருமுகத்தில் தன்னை முதன்மையான பாவி- என தாழ்ச்சியுடன் குறிப்பிடுகிறார் (1 தீமோ 1:15)நம் குடும்பங்களில், சமூகத்தில், நண்பர்களிடத்தில், உறவினர் நடுவில்,பணிபுரியும் இடங்களில் இந்த நல்லபண்பைக் கடைபிடிப்போமானால் எல்லோர் மனங்களிலும் உயர்வான இடத்தைப்பிடித்துக் கொள்வோம்.

தாழ்மையாய் இருப்பவர் போல நடிப்பவர்களும் உண்டு. அப்படிப்பட்ட போலித் தாழ்மை (கொலோ2:18,22) வேண்டவே வேண்டாம். அது மனிதர்களுக்கும், கடவுளுக்கு முன்பாக அருவருப்பான செயலாகும்.முக்கியமாக ஆலயவழிப்பாட்டிலும், இறைவனுக்குரிய எல்லா செயல்களிலும் உண்மையான மனத்தாழ்மையுடன் இருந்து இறையாசீரைப் பெற்றுக்கொள்வோமாக.

-**அண்ணாமலை,** தலைமை ஆசிரியர், பாளையங்கோட்டை

## முதல் சனி வழிபாடு

திருக்கல்யாணத் தாய் திருத்தலத்தில் அக்டோபர் மாத முதல் சனி வழிபாடு நிகழ்வுகள் 06.12.2014 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை நற்கருணை ஆராதனை வழிபாடு நடைபெற்றது. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாளத்தில் திருப்பலி நடைபெற்றது. 11.00 மணிக்கு தமிழிலும் மலையாளத்திலும் ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு அன்னையின் புகழ் பாக்கள் பாடிக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது.

அதன்பின் நவநாள் ஜெபம் விண்ணப்பங்கள் ஒப்புக் கொடுத்தல் திருப்பலி கருத்துக்கள் ஒப்புக்கொடுத்தல் நடைபெற்றது. 12.00 மணிக்கு 14 குருக்கள் இணைந்து நவநாள் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது.

வருகை தந்திருந்த அனைவருக்கும் காலையில் பொங்கல் அதன்பின் குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும், திருப்பலி நிறைவு பெற்ற பின் திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது. அதன் பின் மாலை 4.00 மணிக்கும் 6.30 மணிக்கும் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலி நடைபெற்றது.

## வெற்றிக்கு வழி

ஏழ்மையிலும் நேர்மை
கோபத்திலும் பொறுமை
தோல்வியிலும் விடாமுயற்சி
தரித்திரத்திலும் சரித்திரம்
துன்பத்திலும் தைரியம்
செல்வத்திலும் எளிமை
பதவியிலும் பணிவு
அன்பாக-இனிமையாக-உண்மையாக நேரமறிந்து-சபையறிந்து பேசுக.
எதிரிக்கும் நன்மையே செய்க.

-டே.நிஜிதா,வெள்ளக்கோவில்.



அருள்தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாயின்

# அற்புதங்கள்... சாட்சிகள்...

1. திருமணம் நல்லமுறையில் நடந்தற்கு நன்றி – சகாய வினோத் K.C. புதூர்
2. விசா கிடைத்ததற்கு நன்றி – பிராங்ளின் முள்ளூர்துறை
3. கடன் தொல்லை தீர்ந்தமைக்கு நன்றி – ஜான்போஸ்கோ முள்ளூர்துறை
4. ஊதிய உயர்வு கிடைத்தமைக்கு நன்றி – பூஜா வள்ளவிளை
5. மீன்தொழில் முன்னேற்றத்திற்கு நன்றி – சுஜோ உவரி
6. திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி – ஜெரோம்தாஸ் கண்டன்விளை
7. திருமணம் தடையின்றி நடந்தமைக்கு நன்றி – வினோஷ், பீனா விழிஞம்
8. சுகப்பிரசவம் கிடைத்தமைக்கு நன்றி – ஜெனி பாரசாலை
9. தைராய்டு கட்டி அறுவைச்சிகிச்சை வெற்றி கிடைத்தமைக்கு நன்றி – பிரபா செட்டிசேர்விளை
10. நல்ல இல்லம் கிடைத்தமைக்கு நன்றி – ரமேஷ் நியாந்றின்கரை
11. குடும்பசமாதானம் கிடைத்தமைக்கு நன்றி – லிதியாதாமஸ் உடுமலைப்பேட்டை
12. வேலை கிடைத்தமைக்கு நன்றி – அந்தோணி, ஷைனி பொற்பை
13. திருமணவரம் கிடைத்து நடந்தமைக்கு நன்றி – மெர்லின் ஆணைக்குளம்
14. குழந்தைவரம்,வேலை கிடைத்தமைக்கு நன்றி – வின்சென்ட்ராஜ் பட்டரிவிளை
15. அன்னை தந்த அற்புதமாதா போட்டுக்கு நன்றி – சஜன் புன்னக்காயல்
16. விபத்திலிருந்து உயிர் காத்தமைக்கு நன்றி – லூர்துமரியான் பொற்பை
17. கால்வலி,மூட்டுவலி குணமானதற்கு நன்றி – மார்ஷியா குளச்சல
18. அரசு வேலை கிடைத்தமைக்கு நன்றி – விதியாள் உடன்குடி
19. இல்லவேலை கடனில்லாமல் பூர்த்தியானதற்கு நன்றி – ரகுவின் விழிஞம்
20. குழந்தையின் கால்களுக்கு வலிமை தந்து நடக்க வைத்தமைக்கு நன்றி – ஷோனி வேம்பார்
21. குடிப்பழக்கத்திலிருந்து பூரண விடுதலை கிடைத்தமைக்கு நன்றி – ரஜீன் உவரி
22. வெளிநாட்டில் நிரந்தர வேலை கிடைத்தமைக்கு நன்றி – அன்சில் ராஜா குதிரைப்பந்திவிளை
23. தொழில் வளத்திற்கு நன்றி – ஜோரிஷ்வா பேய்குளம்
24. குடும்பத்தில் நல்லவரன் கிடைத்தமைக்கு நன்றி – ஆண்டனி மரியநாடு
25. தீராத தலைவலி தீர்ந்து நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி – ராபின் நாகர்கோவில்

## திருமதிகளின் வெகுமதி திருக்கல்யாணத்தாய்

இல்லத்தின் அரசிகளாக விளங்கும் திருமதிகள் ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்தை திருக்குடும்பமாக,ஒரு குட்டித் திருச்சபையாக மாற்ற,கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கடைப்பிடித்து கிறிஸ்துவை பின்பற்றி தங்கள் வாழ்க்கையில் கிறிஸ்துவை பிரதிபலிக்கும் ஒரு உத்தம்கிறிஸ்தவர்களாக வாழ,இறை நம்பிக்கையில் உறுதிகொண்டு வாழ நம் திருக்கல்யாணத்தாய் நமக்கு அழைப்பு விடுக்கின்றார். அவரிடம் விளங்கிய நற்பண்புகளை,புண்ணிய வாழ்க்கையை பின்பற்றி திருத்தாயைப் பின் தொடர்வோம்.

**அருள் மிகப் பெற்றவள்:- (லூக்1 : 26-38):**கடவுளால் எல்லாம் இயலும் என்ற நம்பிக்கையுடன் கடவுளின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து,ஆண்டவரின் அடிமையாகத் தன்னையே தாழ்த்திக்கொண்டதால் கடவுளின் அருளைக் கண்டடைந்து அருள் மிகப் பெற்றவளாகிறாள்.

**பிறரன்பு:- (லூக் 1 :39-45):**கடவுளின் அருளால் நிறைந்த மரியாள் முதிர்ந்த வயதில் கருவுற்றிருந்த, உதவி தேவைப்பட்ட எலிசபெத்தை தேடிச் சென்று உதவுகிறார்.

**கடவுளுக்கு நன்றி செலுத்துதல்:- (லூக் 2:46-55):**தாய் மரியாள் தன் வாழ்வில் கடவுள் செய்த எல்லா நன்மைகளையும் நினைத்து நன்றியுணர்வோடு, மனநிறைவோடு நன்றி கூறுகின்றார்.

**குழந்தை இயேசுவை பேணி வளர்த்தல்:- (லூக்2:40-62):**அன்னை மரியாள் தன் மகன் இயேசுவை ஞானத்திலும்,உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும், மனிதருக்கும் உகந்தவராக வளர்க்கின்றார்.

**இறைவிசுவாசம்:- (யோ 12:1-10):**இயேசுவின் தாய் மரியாள் தன் அன்பு மகன் தான் கேட்பதை கண்டிப்பாக நிறை வேற்றுவார் என்ற முழு விசுவாசத்துடன் பணியாளரிடம் அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள் என்றார்.

**பேறு பெற்றவர்:- (லூக்11:27):**இயேசுவைப் பெற்றெடுக்க பாக்கியம் கிடைத்த தாய் எவ்வளவு பேறுபெற்றவள் என்று புகழ்கின்றனர்.

**தாய் என்பவள் யார்? (லூக் 8:19-21) (மாற் 3:31-35):**இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செயல்படுகிறவரே என் தாய் என்று இயேசு தன் தாயைப் பற்றி பெருமையாகக் கூறுகின்றார்.

**அனைவருக்கும் தாய்:- (யோ 19:25-27)** இயேசுவின் தாய் வியாகுல அன்னையை நம் அனைவருக்கும் தாயாகத் தந்து அவளைப் பின் தொடர்ந்து,அவளின் புண்ணிய வாழ்க்கையை கடைப்பிடிக்கச் சொல்கின்றார். எனவே திருமதிகளாகிய நாம் அனைவரும் நம் திருக்கல்யாணத்தாயின் நிச்சயதார்த்த விழாவைக் கொண்டாடும் இந்த நன்னாளிலே அன்னையின் பாதச் சுவடுகளை பின்பற்றி விசுவாச வாழ்வில் நம் குடும்பத்தை நடத்திச் செல்வோம்.

நல் ஆலோசனை மாதா எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

– நிர்மலா ராணி, மார்க்கம்பட்டி

## எல்லாம் வேண்டும்

–ஜோஸ்பின்,பொற்பை.

அன்னையின் அன்பு வேண்டும்
ஆசையில்லா மனம் வேண்டும்
இறை வார்த்தைகள் படிக்கவேண்டும்
ஈகைகுணம் வளர வேண்டும்
உண்மை நிலைத்து நிற்க வேண்டும்
ஊரில் சமாதானம் வேண்டும்
என்றும் மக்களுக்கு மகிழ்ச்சி வேண்டும்
ஏற்றம் அனைவருடைய வாழ்விலும்
வேண்டும்
ஐயன் இயேசுவின் வழியை பின்பற்ற
வேண்டும்
ஒற்றுமை மக்களுக்குவேண்டும்
ஓடி ஓடி உழைக்க வேண்டும்
ஔவையார் உரைத்த வாழ்வியல்
வேண்டும்
அதற்க நம் திருக்கல்யாணத்தாயின்
துணை வேண்டும்.

# மரியாளின் நற்பண்புகள்

1. இறை வார்த்தையைக் கேட்டாள்
2. இறை வார்த்தையை நம்பினாள்
3. இறை வார்த்தையை தியானித்தார்
4. இறை வார்த்தையை வாழ்வாக்கினார்

1. இன்றைய நாளில் நம்மில் பலர் இறை வார்த்தையைக் கேட்டக்கூட விரும்புவதில்லை. உலக கவர்ச்சியும், மாயையும்,சூழ்ச்சியும் நிறைந்த உலகில் மனிதன் அலங்காரன வார்த்தைகளில் அதிக நாட்டம் கொள்கின்றான். அலங்காரமாகப் பேசுபவர்கள் சாத்தானின் பிள்ளைகள் என இறைவார்த்தை நமக்கு எடுத்துச் சொல்கிறது. ஆகவே அன்னைமரியாளைப் போல தீமையை விலக்கி நற்பண்புகளை நம்மில் வளரச் செய்ய இறைவார்த்தையை நாம் கேட்டு நடக்க வேண்டும். வான தூதர் இறைவனின் திட்டத்தை அறிவித்ததும், நான் ஆண்டவரின் அடிமை, உமது வார்த்தையின் படியே எனக்கு நிகழட்டும் என இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடந்தார் அன்னை மரியாள்.

**2. இறை வார்த்தையை நமபினாள்:**

உலகில் இன்று பலருக்கு இறைவன் ஒரு வியாபார பொருளாகத்தான் தெரிகிறார். நம் திருத்தந்தை கூட மனிதன் இறைவனைவிட பணத்தை வணங்குகிறான் என கூறியிருக்கிறார். அநேக நேரங்களில் நாம் இறைவனிடம் இறை வா நீ எனக்கு நான் கேட்கும் இந்த காரியத்தை முடித்து தந்தால், நான் உமக்கு நேர்ச்சையாக இதைச் செய்வேன் என வேண்டுகிறோம். இது தவறு. இறைவன்தான் நமக்கு நிபந்தனை போட வேண்டுமேயன்றி மனிதன் இறைவனுக்கு போடக்கூடாது. எதையுமே எதிர்பாராமல் தன்னை முழுவதுமாக இறைவனுக்கு அர்ப்பணித்து இறைவார்த்தை நம்பியவள் நம் அன்னை மரியாள்.

**3. இறை வார்த்தையை தியானித்தார்:**

ஆண்டவருக்குப் பணி செய்வதில் கூட சிலர் அரசியல் வாதிகளைப் போல நடந்து கொள்கிறார்கள். தன் சுயநலத்திற்காக, பெருமைக்காக, தன்னை உயர்ந்தவராக் காட்டிக் கொள்வதற்காக, ஆதாயம் தேடி ஆண்டவருக்குத் தொண்டு செய்கிறார்கள் சிலர். இதுவும் தவறு. எனக்கு ஆதாயம் எனத் தெரிந்த அனைத்தையும் கிறிஸ்துவுக்காக நான் இழந்துவிட்டேன் என்று அறிவித்து வாழ்ந்த பவுலைப் போல, இறைவனுக்காக தன்னை தியாகம் செய்து இறைவார்த்தையை தன் உள்ளத்தில் வைத்து தியானித்தவர் அன்னை மரியாள்.

**4. இறை வார்த்தையை வாழ்வாக்கினார்:**

நவீன விஞ்ஞான உலகில் எனக்கு எல்லாம் தெரியும். நான் எதையும் சாதிக்க மடியும் என்று இறைவனை மறந்து இறுமாப்பு கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறான் மனிதன். மனித சக்தி பெரிது என எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கின்ற மனிதன் தான் நினைத்தால் எதையும் சாதிக்க முடியும் என எண்ணுகின்றான். ஆனால் தன்னை முழுவதும் இறைவனுக்கு ஒப்புக் கொடுத்து வாழ்ந்த அன்னை மரியாள் இறைவார்த்தையின்படி தம்மை அர்ப்பணித்து வாழ்ந்தார். இதோ உம் அடிமை என்று தன்னைத் தாழ்த்தி ஒப்புக்கொடுத்த அன்னையை உலக மாந்தருக்கெல்லாம் தாயாக “இதோ உன் தாய்” என உயர்த்தினார். தாழ்ச்சியுடையோர் புகழ்ச்சியடைவர். ஆகவே நாமும் நம் அன்புத்தாய் அன்னை திருக்கல்யாணத்தாயின் நற்பண்புகளை தியானித்து அவர் வழி நடந்தால் இறைவன் எல்லா நிலைகளிலும் நம்மை உயர்த்துவார்.

–**Y.V. ராஜ்**, சென்னை.

# அன்னையே திருக்கல்யாணத் தாயே !

அன்னையே திருக்கல்யாணத் தாயே
அள்ளக் குறையாத அட்சயப் பாத்திரமே!
அத்தனை மாந்தரும் பொற்பையில் இணைவது
அம்மா உந்தன் திருமண நாளினிலே!
அருள் நிறை மரியும் நீரே என்றே
ஆண்டவரின் தூதரும் உம் புகழ் பாட
ஆண்டவரின் அடிமை நான் என்றே பணிந்து நின்று
அமலனை எமக்களித்த கல்யாணத் தாயே!
என்றும் பெண்களுக்குள் ஆசீர் பெற்றவர் நீரென்று
எலிசபெத்தால் வாழ்த்தப் பெற்ற கல்யாணத் தாயே!
மண் தந்த மாணிக்கமாய் விண் சென்ற
மங்கையர் குலப் பெருமையும் நீயே அன்றோ!
கானாவூர் கல்யாண வீட்டின் நிலை கண்டு
கனிரசம் தந்த காருண்யத் தாயே!
கன்னியர் குறை தீர்த்து சுப வாழ்வளிக்கும்
கல்யாணத் தாயும் நீயே அன்றோ!

– M.மிக்கேல் உஷா,பொற்பை.

# புதிய ஒளியே வருக.

இறைவன் நமக்கு இனிய புத்தாண்டில். இரட்டிப்பான மகிழ்ச்சியை தந்துள்ளார். புதிய ஆண்டாகவும். பரிசுத்த திருகல்யாண அன்னையின் மாபெரும் சிறப்பான திருவிழாவும் அமைய பெற்றுள்ளது. இறைவனோடு நம் அன்னையும் சேர்ந்து அருளாசீரை வழங்குகிறார். சகல நன்மைகளாலும். எல்லாவிதநலன்களாலும். நிரப்பி அருள் வளம். புரிகிறார்.

**என் உயிரே ஆண்டவரை போற்றிடு. 104.1**

இனிய ஆண்டில் இறைவன் நமக்கு தேவையானதை தந்து வழிநடத்த வல்லவராக இருக்கிறார். அமைதி. மகிழ்ச்சி அழியா செல்வங்கள். பரிபூரண சமாதானம். குழந்தைகளுக்கு நல்ல அறிவுதிறனும். போதிய ஞானமும், ஒளிமயமான எதிர்காலமும் தொழில் வளமும், இறையாசீரோடு வளங்கிடுவார். (இறைவார்த்தையின்படி. மத்தேயு. 6:33. இவை அனைத்தும் சேர்த்து கொடுக்கப்படும்.) இல்லங்களையும் இதயங்களையும், மகிழ்ச்சியால் நிரம்ப செய்யும். இறைவனாகிய, வாழ்வளிக்கும், தந்தையே போற்றி மீட்பராகிய இயேசு கிறிஸ்துவே, போற்றி, பரிசுத்த ஆவியின் சுடரொளியே, போற்றி, இனிய புதிய ஆண்டே வருக.

எல்லாபுகழும் மாட்சியும்,என்றென்றும். உமக்கு உரியதே.

–செல்வம்மாள்,பொற்பை.

**வருந்துகிறோம்**

2014–டிசம்பர் மாத இதழில் ஏற்பட்ட அச்சுப்பிழைக்காக வருந்துகிறோம்.

ஆசிரியர் குழு



# எனது கிராமம்

– ம. ஜேசுதாசன்
(முன்னாள் தலைவர்,
தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி)

தாவீது அண்ணாவியர்

பொத்தக்காலன்விளை கிராமத்தின் நிர்வாகத்தைக் கவனித்துக் கொள்ள ஒரு முக்கந்தரும், கோவில் காரியங்களைப் பார்த்துக் கெள்ள ஒரு உபதேசியாரும் இருந்ததைப்போல, கிராமியக் கலைகளான நாடகம், இசை ஒயிலாட்டம், களியாட்டம் மற்றும் சிலம்பாட்டம் போன்றவற்றை பேணிப் பாதுகாக்கவும் மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்கவும் அண்ணாவியார் என்ற ஒருவர் இருந்தார். இவர் தமிழ்மொழியை எழுதப்படிக்க தெரிந்தவராகவும் மேற்சொன்ன கலைகளின்பால் ஆர்வமும் ஈடுபாடு உள்ளவராகவும் இருந்தார். ஒருவர் அண்ணாவியர் என்று அறிவிக்கப்பட்டபின் அவருடைய ஆண் பிள்ளைகளில் ஒருவருக்கு அந்த கலை நுணுக்கங்களைக் கற்றுக் கொடுத்து தனக்குப்பின் அந்த தனயன் பொருப்பேற்க வழி செய்கிறார். அந்த வகையில் நமது கிராமத்தில் முதன்முதலாக அண்ணாவியாராக அறிமுகமாகிறார் மிக்கேல் அண்ணாவியார். சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னால் நல்ல பெயரோடும், புகழோடும் வாழ்ந்திருக்க வேண்டும். அவருக்குப்பின் அவருடைய மகன் பாக்கியநாதன் என்பவர் அண்ணாவியாராக அறிவிக்கப்படுகிறார். பாக்கிய நாத அண்ணாவியாருக்குப்பிறகு அவருடைய மகன் தாவீது என்பவர் அண்ணாவியாகிறார். இந்த தாவீது அண்ணாவியாரைப்பற்றி இந்த இதழில் பார்க்கலாம்.

தாவீது அண்ணாவியார் 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து சாதனை புரிந்த ஒரு பெரிய கலைஞர். கிராமியக் கலைகளைக் கற்றுத் தேர்ந்து கிராமத்தின் இளைஞர்களுக்கு அவற்றைக் கற்றுக் கொடுத்ததோடு வேறு பல துறைகளிலும் தன்னுடைய முத்திரையை பதித்த சகல கலா வல்லவன் எனலாம். இவர் கடந்த நூற்றாண்டின் துவக்கத்தில் பிறந்து 1969-ம் ஆண்டு இறந்தார்.இளமைக் காலத்தில் இலங்கையிலுள்ள கொழும்பு நகருக்கு சென்று சில காலம் அங்கு வியாபாரத்தில் ஈடுபட்டார். 1940 வாக்கில் தாயகம் திரும்பி வந்து தந்தை வழியில் அண்ணாவி என்ற பொருப்பை ஏற்றார். அவருடைய முக்கிய பொருப்பு அன்னை மரியாளின் ஆண்டு திருவிழாவின்போது நடக்கும் புனித செபஸ்தியார் நாடகத்தை நல்லமுறையில் நடத்திக் கொடுப்பது. புனித செபஸ்தியார் முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்து கிறிஸ்துவுக்காகவும், கிறிஸ்தவ மதத்திற்காகவும் தன் இன்னுயிரைக் கொடுத்த ஒரு தியாக புருஷர். அந்நாளில் ரோமபுரியை ஆண்ட மன்னன் தீயோக்ளேஸியான் ஆதிக் கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்தி அவர்களை கொன்று குவித்த கொடுங்கோலன். அவருடைய கொடுமைகளுக்கு ஆளானவர் புனித செபஸ்தியார். இந்த உண்மை வரலாற்றை தெருக்கூத்து பாணியில் நாடகமாக பயபக்தியுடன் நடித்து காண்பிப்பார்கள். மூன்று நாட்கள் நடக்கும்ஒருமாத காலமாக பயிற்சி கொடுத்து திருவிழாவின் கடைசி நாளும் அதற்குப் பிறகு இரண்டு நாட்களும் நாடகத்தை அண்ணாவியார் நடத்தி வைப்பார். இந்த ஒரு மாதமும் அண்ணாவியாரும் மற்ற நடிகர்களும் விரதம் இருந்து பக்தியோடு நடத்துவார்கள். இதை ஒரு பொழுதுபோக்கு அம்சமாக பார்க்காமல், பக்தியின்ஒரு வெளிப்பாடாகத்தான் பார்த்தார்கள். இதற்குப்பின்னணியும் உண்டு. அந்த கால கட்டத்தில் கொடிய நோய்களான காலராவும், அம்மை நோயும் அவ்வப்போது கிராமங்களை தாக்கி உயிர்களை பலி கொள்ளும். இவற்றிலிருந்து தங்களை பாதுகாக்க புனித செபஸ்தியார் உதவுவார் என்ற நம்பிக்கையில் அவரை இந்த நாடகத்தின் வழியாக வேண்டினார்கள்.

இந்த நாடகத்தில் பல சிறப்பு அம்சங்கள் உள்ளன. கதாபாத்திரங்கள் தாங்கள் பேசவேண்டிய வசனங்களை பாட்டு இசையோடும், கைகால்களை அசைத்து நடனத்தோடும் பேசுவார்கள். பின்னணி பாட்டும் உண்ட. நாடக வசனங்கள் எல்லாம் பக்குவப்படத்தப்பட்ட பனை ஓலையில் அழிக்க முடியாத ஒருவகை திரவத்தால் எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டுள்ளது. பனை ஓலை 15 அங்குலம் நீளமும் 2அங்குலம் அகலமும் கொண்டு இரண்டு முனைகளிலும் துவாரமிட்டு தடித்த நூலால் கட்டப்பட்டுள்ளது. இன்றைய நடைமுறை தமிழ் எழுத்துக்களிலிருந்து சிறிது மாறுபட்டுள்ளது. அவற்றை படித்து சொல்லிக் கொடுத்து நடத்துவதற்கு தெய்வ அருள்வேண்டும்,அந்த அருள் பெற்ற அண்ணாவியாரால் மட்டும்தான் அந்த பனை ஓலை ஏடுகளை கையாள முடியும் என்ற நம்பிக்கை மக்களிடையே உள்ளது. நாடக வசனங்கள் மிகுந்த கருத்தாழ மிக்கவை. ஒரு சிறந்த அறிவாளியால்தான் இத்தகைய கருத்தாழமிக்க இசைக்கேற்ற வசனங்களை எழுதியிருக்க முடியும். சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

நாடகம் துவங்குவதற்கு முன்னால் வானதூதர்கள் வந்து தங்களுடைய ஆசீரை எல்லோருக்கும் வழங்கி நாடகத்தை ஆரம்பிக்கும்வசனத்தின் ஒரு பகுதி இதோ படியுங்கள்.

ஆபிரகாம் மகன் ஈசாக்கை
அமலனுக்குப் பலியாய் வெட்ட
மேவி வாளை நிறுத்த செய்த
தேவ அதி தூதர் நாமே

இன்னொரு உதாரணம். ரோமாபுரி சக்கரவர்த்தி தீயோக்கிளேஸியானுக்கும், செபஸ்தியான் துரைக்கும் தர்க்க வாதம் நடைபெருகிறது. அதை வெளிபடுத்தும் வசனப் பாடல் இதோ:

மன்னன்: பயமே பகரவேண்டாம் என பகர்ந்த நீச பாதகரே
துயர்படவோ நீ பிறந்தாய் சொகுசாயிருந்து பவுசாண்டாய்
சதை அயர அடித்து நீயும் அஞ்சாதிருப்பதென்ன
ஆங்காரம் கொண்டவனே குருசில் மாண்டோன்
பாங்காலில் சேர்ந்தவனே

செபஸ்தியார்: குரிசில் மரித்தார் பாவிகளுக்காய் குருவாம் என் ஏசுநாதர்
அரசே நீயும் வணங்குகின்ற அலகைப் பேயால் என்னபலன்
மாதர் பிரம்மை கொண்டெழுந்த கல்லூரலில் அடிபட்ட
பேய்களும் தெய்வமாமோ கருங்குரங்கு நாய்களும் குருவாமோ

மன்னன்: அடடா செபஸ்தியான் துரையே அதட்டி மிரட்டி பேசுகிறாய்
மட்டி வாய் உனது புத்தியினால் மடயா நீ வஞ்சகனே
இப்போது துடியுடன் உன் உயிர் சடுதியில்
அம்பினால் சூட்டியே எய்யச் செய்வேன்
சீவன்விட மீட்டியே வாதை செய்வேன்

செபஸ்தியார்: வதைப்பேன் என்ற ராசனே கேள்
வால் குரங்கு பேய்கள் தம்மை துதிக்கும் கோவே
பெண்கள் தன்னை சுமந்த மூதி கடவுளாமோ
என்னை சிதைக்கவே அம்பினால் தீதாக வாதை செய்தால்
தேவனின் மோட்சம் சேர்வேன்
புத்தியில்லாத பூமனே நீ அறிவாய்

இந்த அற்புதமான இலக்கியத்தை எழுதியவர் மிக்கேல் அண்ணாவி என கருதப்படுகிறது. இவர் மணப்பாடு கிராமத்தில் பிறந்த பரதர். சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்னால் அங்கிருந்து நமது கிராமத்திற்கு வந்து தங்கி இருந்து இந்த நாடகத்தை எழுதியதோடு நமது கிராமத்தை சேர்ந்த மிக்கேல் அண்ணாவியாருக்கு கற்றுக் கொடுத்திருக்கிறார். இந்த இலக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும் . ஏனெனில் இது நமது கிராமத்தின் பொக்கிஷம். இன்று ஒரு நல்ல காரியம் நடந்துள்ளது. நமது கிராமத்தை சேர்ந்த திரு. செல்லத்துரையுடைய மகன்

ராஜா என்பவர் தன்னுடைய முதுகலை பட்டப்படிப்பின் ஒரு அங்கமாக கிராம கலைகள் என்ற தலைப்பில் இந்த செபஸ்தியார் நாடகப்பாட்டு வசனங்களை புத்தகமாக தயாரித்துள்ளார். தாவீது அண்ணாவியாரின் பணி செபஸ்தியார் நாடகத்தை கற்றுக் கொடுத்து நடத்துவதோடு முடிந்துவிடவில்லை. ஒயிலாட்டம், சிலம்பாட்டம், களியாட்டம் இவற்றிலும் புலமை பெற்று கிராமத்து சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் கற்றுக் கொடுத்தார். களியாட்டம் என்பது எட்டு பேர் சேர்ந்து வட்டமாக நின்று ஆடும் ஒரு கலை அம்சம் கொண்ட, ஆனால் கடினமான,விளையாட்டு. இதில் பாட்டு முக்கியமானது. அண்ணாவியார் கையில் ஒரு இசை கருவியை வைத்து தாளத்துடன் ஒலி எழுப்பி பாடுவார். அந்த பாட்டு இசை கேற்றவாறு எட்டு வீரர்களும் தங்கள் கையிலுள்ள இரண்டு கம்புகளையும் தட்டி ஒலி எழுப்பி கால்களால் தாளம்போட்டு துள்ளல் நடையுடன் சுற்றி வர வேண்டும். எட்டு வீரர்களில் ஒருவர் சிறு தவறு செய்தாலும் குழப்பம் ஏற்பட்டு ஆட்டம் தடைபடும். இதில் பாடப்படும் பாட்டு அந்தந்த காலத்திற்கேற்றவாறு அமையும். கிறிஸ்துமஸ் தினத்திற்கு ஒரு பாட்டு, புத்தாண்டு தினத்திற்கு ஒரு பாட்டு, திருமண நிகழ்ச்சிகளுக்கு ஒரு பாட்டு என வேறுபடும். பார்ப்போரை பரவசப்படுத்தி, அவர்களுடைய கை, கால்களையும் ஆடவைக்கும், அற்புதமான கிராமக்கலை. 1950-களில் தாவீது அண்ணாவியாரின் முயற்சியாலும், உழைப்பாலும் அன்றைய சிறுவர்கள் எல்லோரும் இந்தக் கலையைக் கற்றார்கள். அவ்விதம் கற்ற அன்றைய சிறுவர்களில் அடியேனும் ஒருவன்.

தாவீது அண்ணாவியாரின் மற்றொரு பங்களிப்பு கோவில் பாடகர் குழுவை வழி நடத்தியது. தந்தை மஸ்கரனாஸ் பங்குக்குருவானவராக இருந்தபோது கோவிலில் ஆர்மோனியம் வாசித்து பாடகர் குழுவை நடத்தியவர் கூத்தங்குழியைச் சேர்ந்த ஒரு ஆசிரியர். அவர் மாற்றலாகி தந்தை சிலுவை அந்தோணி அடிகளார் பொருப்பேற்றதும் கோவில் ஆர்மோனியத்தை கையில் எடுத்தவர் தாவீது அண்ணாவியார். அந்த காலக்கட்டத்தில் கோவில் ஜெபமும் பாட்டுகளும் பெரும்பாலும் லத்தீன் மொழியில் இருந்தன. அவை தமிழ் எழுத்தில் அச்சடிக்கப்பட்டு புத்தகமாக பாடகர் குழுவின் கைகளில் இருந்தது. அதிகம் படிக்காத தாவீது அண்ணாவியார் இந்தப் பாடல்களையும் ஜெபங்களையும் படித்ததோடு மற்றவர்களுக்கு கற்றும் கொடுத்தது இன்றும் எனக்கு வியப்பாக உள்ளது. அண்ணாவியாரின் இன்னொரு சிறப்பான பணி தேர் சப்பரங்களை அழகாக எல்லோரும் வியக்கும் வண்ணம் அலங்கரிப்பது. 1953 வரை அந்தகலையில் முடிசூடா மன்னாக திகழ்ந்தவர் சீமோன் நாடார்.இவருடைய வீட்டின் மேல்மாடி முழுவதும் ஜோடனைப் பொருட்களால் நிறைந்திருக்கும். பொத்தக்காலன்விளையில் இருந்த தேர் சப்பரம் மாத்திரமல்ல, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள எல்லா ஊர்களிலும் தேர் சப்பரம் அலங்காரம் செய்வது நமது கிராமத்தைச் சேர்ந்த சீமோன் நாடார்தான். 1953-ம் ஆண்டு சிறிவைகுண்டம் கோவிலுக்கு தேர் சப்பர அலங்காரத்திற்காக சென்ற இவரை காலரா என்ற கொடிய தொற்றுநோய் தொற்றிக் கொண்டது. நோயோடு ஊருக்கு வந்தவர் அந்த நோயிலிருந்து மீளவே இல்லை. அதன் பிறகு இந்தப் பணியை ஏற்றது தாவீது அண்ணாவியார்.அவர் இறக்கும் வரை இந்தப்பணியைத் தொடர்ந்தார்.

இத்தனை துறைகளில் எப்படி அவரால் சிறந்து விளங்க முடிந்தது? எவ்வாறு இந்தக்கலைகளை அந்தக்காலத்தில் கற்றுக்கொண்டார்? எனக்கு தோன்றுவது இதுதான். நாடகக்கலையை தனது தந்தையிடமிருந்து கற்றுக் கொண்டிருக்க வேண்டும். மற்ற கலைகளையெல்லாம் முழுக்க முழுக்க தன்னுடைய சுய முயற்சியால் கற்றுத் தெளிந்திருக்க வேண்டும். இந்த இடத்தில் ஒரு கசப்பான உண்மையை எழுதித்தான் ஆகவேண்டும். இந்தக் கலைகள் எல்லாமே அந்தக் கலைஞனுக்கு போதிய வருமானத்தை கொடுக்கவில்லை. அண்ணாவியாருடைய குடும்பம் பெரிது. ஆறு ஆண்கள், ஒரு பெண். தன்னுடைய குடும்ப செலவுகளை சரிக்கட்ட பனை சீசனில்பனைத் தொழிலும் செய்தார். அவர் இறந்தபின் அவருடைய பிள்ளைகளில் யாரும் அண்ணாவி என்ற இடத்தை அடையவில்லை. நாடகத்தை விரும்பும் மக்களின் விருப்பத்தை ஏற்ற தாவீது அண்ணாவியாரின் இரண்டாவது மகன் செல்வராஜ் சிறிது இடைவெளிக்குப் பிறகு நாடகத்தை கற்றுக் கொடுக்கும் பொருப்பை ஏற்றுள்ளார். இந்த ஏற்பாடு எவ்வளவு நாட்கள் நீடிக்கும் என்று கூறமுடியாது. அன்னையின் அருள் இருந்தால் அவளுடைய வழிகாட்டுதல்படி தொடர்ந்து நாடகத்தை நடத்துவேன் என்கிறார் அவர். காலம்தான் பதில் சொல்லும்.

திருக்கல்யாண மாதா துணை

# அருள்தரும் இமயம் திருக்கல்யாண தாயின் திருத்தல திருவிழா மற்றும் அன்னையின் அதிசய 102வது தேர்பவனி காணவரும் பக்தர்கள் அனைவரையும் வருக! வருக! என அன்புடன் வரவேற்கிறோம்!



அன்புடன் **J.A. ரவீஸ்டர்** மற்றும்

**குடும்பத்தார்**

பொத்தக்காலன்விளை

# safety is the best policy !

- குறைந்த பிரிமியத் தொகையில் அதிக அளவு காப்பீடு தரக்கூடிய சிறந்த LIC பாலிசிகள் மாதாந்திர தவனை முறைகளில் எடுத்துத் தரப்படும். (காலாண்டு,அரையாண்டு வருட தவனை முறைகளும் உள்ளது)

- மருத்துவமனையில் உள் நோயாளியாக தங்கி பெறப்படும் அனைத்து சிகிச்சைகளுக்கான செலவுத்தொகையினை திரும்ப பெறும் வகையிலான மருத்துவ காப்பீடு, பாலிசிகள் வருட தவனை முறையில் எடுத்து தரப்படும். (சர்க்கரை நோயாளிகளுக்கும், முதியோர்களுக்கும் கூட பாலிசி எடுத்து தரப்படும்).

- அனைத்து விதமான இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கும் இன்சூரன்ஸ் பாலிசி எடுத்து தரப்படும்.

- PAN CARD - எடுத்து தரப்படும்.

- ரூ 5 லட்சத்திற்கான தனிநபர் விபத்து காப்பீட்டின் வருட பிரிமியம் ரூ 750/- மட்டுமே.

- ரூ 3 லட்சத்திற்கான 4 நபர்கள் கொண்ட குடும்ப மருத்துவ காப்பீட்டின் வருட பிரிமியம் ரூ 8000/- மட்டுமே. அங்கிகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் இலவசமாகவே சிகிச்சை பெறலாம்.

*உங்கள் நண்பன்*



**அருண் வினோத்** (ஊராட்சி செயலர்)
சிலுவைத்தங்கம்
புனித அந்தோணியார் கோயில் ெரு
பொத்தகாலன்விளை
அலைபேசி எண்:9942698939

# ஆன்மீக அழகு

தாய்லாந்து நாட்டின் தலைநகரான பேங்காக் என்ற நகரத்தில் பழமை வாய்ந்த புத்தர் கோவில் ஒன்று இருந்தது. அது மிகச் சிறிய கோவில் தான். ஆனால் அதில்இருந்த புத்தர் சிலையானது 14 அடி உயரத்தில் கம்பீரமாகக் காட்சியளித்தது. அந்த சிலையைக் காண நாடு முழுவதும் இருந்து மக்கள் வெள்ளம் வந்த வண்ணம் இருந்தனர். கோவில் சிறியதாக இருந்ததால் மக்கள் கூட்டம்நெருக்கடியால் அவதிப்பட்டனர். பலர் மயங்கி விழுந்தனர். சிலர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரையும் இழந்தனர்.

இதைக் கண்ட கோவில் நிர்வாகிகள் அந்த சிறிய கோவில் இனி உதவாது, மிகப் பெரிய கோவில் ஒன்றை கட்டினால்தான் மக்கள் நெருக்கடி குறையும் என்று எண்ணி நகருக்கு வெளியே ஒரு அமைதியான இடத்தை தேர்ந்தெடுத்து மிகப் பெரிய கோவில் ஒன்றை கட்டினார்கள். எனினும் கலைநயம் மிக்க அந்த புத்தர் சிலையை அவர்கள் கைவிடவில்லை. அது பச்சை களிமண்ணால் செய்யப்பட்டிருந்தது. பழமை வாய்ந்த அந்த களிமண் சிலையை மெதுவாக பெயர்த்து எடுத்துச் சென்று புதிய கோவிலில் வைத்துவிட வேண்டும் என்று திட்டமிட்டார்கள்.

அதன்படியே வல்லுனர்கள் துணைகொண்டு அந்த களிமண் சிலையை இலாவகமாக பெயர்த்து எடுத்து அதை மிகப்பெரிய தள்ளு வண்டி ஒன்றில் ஏற்றி மெதுவாக தள்ளிக் கொண்டு புதிய கோவிலை நோக்கி பயணித்தார்கள். களிமண் சிலை உடைந்து விடாமல் இருக்க பல பாதுகாப்பு முறைகளை கையாண்டார்கள். ஆனால் திடீரென்று வானம் முழங்கி, இடி இடித்து கன மழை பொழிந்தது. பச்சை களிமண்ணால் செய்யப்பட்ட அந்த புத்தர் சிலையும் கரையத் தொடங்கியது. எந்த முயற்சி எடுத்தும் சிலைகரைவதை அவர்களால் தடுக்க இயலவில்லை.

தங்கள் கண்முன்னேயே தாங்கள் பாதுகாத்து வந்த பழமையான அந்த சிலை கரைவதைக் கண்டு அதிர்ச்சியும் வருத்தமும் கொண்டவர்களாக சோர்ந்துவிட்டார்கள். மழை நின்றவுடன் கரைந்து கிடந்த அந்த களிமண் சிலையைப் பார்த்து அதிசயித்தார்கள். மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனந்த நடனம் ஆடினார்கள். காரணம், அவர்கள் அந்த தள்ளுவண்டியின் மேல் கண்டது 14 அடி உயர களிமண் சிலை அல்ல 12 அடி உயர தங்கச்சிலை.

இரண்டாம் உலகப்போரின் காலத்திலே வேற்று நாட்டவர் தம் தங்க பொக்கிஷங்களை திருடிச் சென்று விடக்கூடும் என்று எண்ணிய தாய்லாந்து நாட்டினர் அந்த தங்கத் தாலான புத்தர் சிலையின்மேல் களிமண்ணை பூசி தங்கத்தை மறைத்து இருந்தார்கள். உள்ளே தங்கம் இருப்பது தெரியாமல் இன்றுவரை அதை களிமண் சிலையாகவே கருதி வந்ததை நினைத்து அந்த மக்களுக்கே சிரிப்பு வந்தது.

நாமும் நமக்குள்ளே பொன்னிலும் மேலான பொக்கிஷமான ஆன்மா இருப்பதை உணராமல் வெளிப்புற அழகு, ஆடம்பரம், பணம், பட்டம், பதவி போன்ற களிமண்ணுக்கே முக்கியத்துவம் கொடுத்து விடுகிறோம். பாவங்களில் வீழ்ந்து நம் ஆன்மாவின் அழகை சிதைக்கிறோம். பாவத்தினின்று விலகி உண்மை பொக்கிஷமான நம் ஆன்மாவிற்கு அழகு சேர்ப்போம்.

**த. பீட்டர் அந்தோணி ராஜ்**

உங்கள் பொருட்டு கடவுளுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்த நாங்கள் கடமைப் பட்டுள்ளோம். (2தெச. 1:3)

# பெற்றோரின் நினைவஞ்சலி

## இறைவனில் இணைந்த 10ம் ஆண்டு



**அ.அமலோற்பவம்**

18-ம் ஆண்டு (09-03-1997)



**ப.அந்தோணிதாசன்**

9-ம் ஆண்டு (08-01-2006)

மெழுகாய் கரைந்து திரியாய் எரிந்து
ஒளியாய் பரந்து நிழலாய் நின்று
கனியாய் கனிந்து எமக்கு உயிர் கொடுத்த
எங்கள் அன்பு பெற்றோர்களே
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
என்றும் அழியாது உங்கள் பாச உணர்வு
எங்களை பிரிந்து இறைவனில் இளைப்பாறும் நீங்கள்
என்றும் உற்ற துணையாய் எமக்கிருக்க
எந்நாளும் இறைவனை இறைஞ்சுகிறோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்

அருட்தந்தை. சிலுவை தங்கம்

அருட்சகோதரி. **ஜோஸ்பின் பொக்கிஷம்** மற்றும்

**அன்பு மக்கள், மருமகன்**

**மருமக்கள், பேரக்குழந்தைகள்**

## கடந்த மாத கேள்வி-பதில் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

| | |
|---|---|
| D.ஜோஸ்பின் மேரி தாசன் | கவரப்பேட்டை |
| W. பெமிலா வில்சன் | கவரப்பேட்டை |
| M. அனிதா ஜான்சன் | கவரப்பேட்டை |
| U.பெனிட்டா டோமினிக் | கவரப்பேட்டை |
| S.கீதா சுரேஷ் | கவரப்பேட்டை |
| A. அன்ன புஷ்பம் ராஜன் | கவரப்பேட்டை |
| T. சுகிர்தமணி அன்பரசன் | கவரப்பேட்டை |
| A. ஜோஸ்பின் அபிஷியா | கவரப்பேட்டை |
| A. ஜோசப் அரிஸ்டாட்டில் | கவரப்பேட்டை |
| U. எல்ஸி தினேஷ் | கவரப்பேட்டை |
| U.இமாகுலேட்சியோனா | கவரப்பேட்டை |
| U.ஆண்டனி அருண்ஜோசப் | கவரப்பேட்டை |
| A.அனுா அகஸ்டின் | கவரப்பேட்டை |
| D.கலா சகாயம் | கவரப்பேட்டை |
| S.ரீட்டா யோவான் | கவரப்பேட்டை |
| A.பாக்கியலெட்சுமி ஆறுமுகம் | கவரப்பேட்டை |
| W.கெவின் ரென்சி | கவரப்பேட்டை |
| லூர்து மேரி தேவசகாயம் | பிரகாசபுரம் |
| S.மலர்விழி செல்வகுமார் | தி.க. குன்றம் |
| சு.பவித்ரா | ரெடில்ஸ் |
| ப.ரூபா | ரெடில்ஸ் |
| A. தெரஸ்லின்ராஜன் | பொற்பை |
| A. ஜான்ஸி சேகர் | பொற்பை |
| G. ரெஜினாள் மேரி | பொற்பை |
| S.மேரி லீலா | பொற்பை |
| A. நர்மதா ஜோஸ் | தோப்புவிளை |
| கபிரியேஸ் மேரி | பொற்பை |
| குயின் ரோஸ் பாக்கியம் | பொற்பை |
| தொ. மிக்கேல்ராஜ் மேகலா | மணப்பாடு |
| P. சந்தணதிரவியம் | பொற்பை |
| M.டேவிட்தேவராஜன் | வெள்ளகோவில் |
| S.நிர்மலா சந்தியாகுராஜன் | மார்க்கம்பட்டி |
| A.மேரி ஷாலினி | பொற்பை |
| A.ஜெரிஷ் அந்தோணி ஜாக்சன் | பொற்பை |
| A.அந்தோணி ஷைனி | பொற்பை |
| S.சிலுவை அந்தோணி | பொற்பை |
| A.பாத்திமா மேரி | கொழுந்தட்டு |
| G. பூபால் | மதுரை |
| D.ஜாக்கலின் டென்சன் | வெள்ளகோவில் |
| யூஜின் கெவின் | வீ.பா.பட்டணம் |
| J.பீட்டர் ஜோசப் | சென்னை |
| P.ஸ்டெல்லாபீட்டர் | மாதர்பாக்கம் |
| S.மரிய செல்லம்மாள் | பொற்பை |
| J.புனிதா ஜெயக்குமார் | பொற்பை |
| D.ஜெலஸ்டி மோனிகா | பொற்பை |
| மெரின் வளன் | நாகர்கோவில் |
| மெரின் வளன் | நாகர்கோவில் |
| G.ஜான் ஷீலா | ஏர்வாடி |
| S. ஜோஸ்லின் | பொற்பை |
| சிறிய புஷ்பம் | பொற்பை |
| R.வெனிஷ்டா ராஜேஷ் | ஏரல் |
| A.மரிய ரேவதி | பொற்பை |
| A.ராஜேஷ் ரமேஷ் | பொற்பை |
| S.பெலிக்ஸ் ஓயிட் | சென்னை |
| S.ஆண்டோ ப்ராங்கிவின் | கரூர் |
| D.ஆபிரகாம் ஜாங்ஸ் | திருச்சி |
| ஜெர்மானுஷ் அலோன்சோ | வீ.பா.பட்டணம் |
| சொர்ணம் – அக்கா | திருச்சி |
| .E.அகஸ்டா | பொற்பை |
| J.அமல வினிஸ்டா | பொற்பை |

## கடந்த மாத விவிலிய விடைகள்

1. சீன் பாலை வனம்
2. மன்னா
3. இரபிதிம்
4. அமலேக்கியர்
5. எலியேசர்
6. ஓவியத்தையோ
7. ஆறு ஆண்டுகள்
8. விதவை,அனாதை
9. கையூட்டு
10. பிற தெய்வங்களின் பெயரை
11. சிலைத் தூண்களை
12.சித்திம் மரம்
13. விளக்குத் தண்டு
14. பத்து
15. ஒலிவ எண்ணெய்
16. பெட்சலேல், ஒகொலியாபு
17. யோசுவா
18.பிரசன்னம்
19. முகத்தோற்றம்
20. முக்காடு

# வாழ்வு தரும் வார்த்தைகள் – ஜனவரி 2015

| தேதி | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|
| 1. | மரியாள் இறை அன்னை | எண் 6:22-27; | |
| | | கலா 4:47; | லூக் 2:16-21 |
| 2. | புனித பெரிய பசிலியார் | 1யோவா 2:22-28; | யோவா 1:19-28 |
| 3. | புனித எலியாஸ் சவாரா | 1யோவா 2:29-3:6; | யோவா 1 :29-34 |
| 4. | ஆண்டவரின் திருக்காட்சி | எசா 60:1; | |
| | | எபே 3:2-3,5-6; | மத் 2:1-12 |
| 5. | புனித ஜான் நியூமென் | 1யோவா 3:22-4:6; | மத் 4:12-17,23-25 |
| 6. | | 1யோவா 1:7-10; | மாற்கு 6:34-44 |
| 7. | புனித ரெய்மண்ட் | 1யோவா 4:11-18; | மாற்கு 6:45-52 |
| 8. | | 1யோவா 4:19-5:4; | லூக் 4:14-22 |
| 9. | | 1யோவா 5:5-13; | லூக் 5:12-16 |
| 10. | புனித வில்லியம் | 1யோவா 5:14-21; | யோவா 3:22-30 |
| 11. | ஆண்டவரின் திருமுழுக்கு | எசா 55:1-11;1 | |
| | | யோவா 5:1-9; | மாற்கு 1:7-11 |
| 12. | | எபி 1:1-6; | மாற்கு 1:14-20 |
| 13. | புனித ஹிலாரி | எபி 2:5-12; | மாற்கு 1:21-28 |
| 14. | அருளாளர் தேவசகாயம் | எபி 2:14-18; | மாற்கு 1:29-39 |
| 15. | புனித வனத்து சின்னப்பர் | எபி 3:7-14; | மாற்கு 1:40-45 |
| 16. | முத்தி. ஜோசப் வாஸ் | எபி 4:1-5,11; | மாற்கு 2:1-12 |
| 17. | புனித வனத்து அந்தோனியார் | எபி 4:12-16; | மாற்கு 2:13-17 |
| 18. | ஆண்டின் ஞாயிறு | 1சாமு 3:3-10,19; | |
| | | 1கொரி6:13-15,17-20; | யோவா 1:35-42 |
| 19. | | எபி 5:1-10; | மாற்கு 2:18-22 |
| 20. | புனிதர்கள் ஃபபியான்&செயஸ்தியான் | எபி 6:10-20; | மாற்கு 2:23-28 |
| 21. | புனித ஆக்னஸ் | எபி 7:1-3, 15-17; | மாற்கு 3:1-6 |
| 22. | புனித வின்செண்ட் | எபி 7:25-8:6; | மாற்கு 3:7-12 |
| 23. | புனித எமரன்டியானா | எபி 8:6-13; | மாற்கு 3:13-19 |
| 24. | புனித பிரான்சிஸ் சலேசியார் | எபி 9:2-3,11-14; | மாற்கு 3:20-21 |
| 25. | ஆண்டின் ஞாயிறு | யோவான் 3:1-5,10; | |
| | | 1கொரி 7:29-31; | மாற்கு 1:14-20 |
| 26. | புனித திமோத்தேயு&டைட்டஸ் | 2திமொ1:1-8; | மாற்கு 3:22-30 |
| 27. | புனித ஆஞ்சலா மெர்சி | எபி 10:1-10; | மாற்கு 3:31-35 |
| 28. | புனித அக்குவின் தோமா | எபி 10:11-18; | மாற்கு 4:1-20 |
| 29. | புனித கில்டாஸ் | எபி 10:19-25; | மாற்கு 4:21-25 |
| 30. | | எபி 10:32-39; | மாற்கு 4:26-34 |
| 31. | புனித ஜான் போஸ்கோ | எபி 11:1-2, 8-19; | மாற்கு 4:35-41 |



# திருவிவிலியம் நமது செல்வம்

## விவிலிய வினா – விடை போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி : விடுதலைப்பயணம் அதிகாரம் 16 முதல் 34 வரை**

விடுதலைப்பயணம் 37முதல் 40 வரை லேவியர் 1 முதல் 7 முடிய

1. சித்திம் மரத்தால் ஒரு பேழையை செய்தவர் யார்?
2. கெருபுகளின் முகங்கள் எவற்றை நோக்கியவாறு இருந்தன?
3. சித்திம் மரத்தால் தண்டுகள் செய்து அவற்றை எதனால் பொதிந்தார்?
4. மேற்கு பக்கத்தில் எத்தனை முழத் தொங்கு திரைகள் இருந்தன?
5. யாருடைய பொறுப்பில் லேவியர் திருஉறைவிடைத்தின் இருப்பை கணக்கெடுத்தனர்?
6. ஆரத்திக் காணிக்கையாக வந்த வெண்கலம் எத்தனை கிலோகிராம்?
7. ஏப்போதின் அங்கி முழுவதையும் எந்த நிறத்தில் நெசவு வேலைபாட்டுடன் செய்தார்?
8. புனித மணிமுடிக்கான பட்டத்து மேல் என்ன முத்திரைப்போல் பொறிந்து வைத்தனர்?
9. சந்திப்புக் கூடாரத்திற்கும் பலி பீடத்திற்கும்இடையில் எது வைக்கப்பட்டது?
10. திருஉறைவிடத்தின்மேல் பகலில் எது இருந்தது?
11. ஆண்டவருக்கு செலுத்தும் நேர்ச்சை பறவை எரிபலி எனில் எதை நேர்ச்சையாக செலுத்த வேண்டும்?
12. உணவுப்படையலில் எஞ்சியது யாருக்கு உரியது?
13. நேர்ச்சையான எந்த உணவுப்படையலிலும் என்ன இடப்பட வேண்டும்?
14. எவற்றை நீங்கள் உண்ணலாகாது?
15. தலைவனுக்காகப் பாவக்கழுவாய் நிறைவேற்றுவார் யார்?
16. பாவம் போக்கும் பலிப்பொருளை யாருக்குக் கொண்டுவர வேண்டும்?
17. மிருதுவான மாவில் எத்தனையில் ஓர் பங்கை கொண்டுவர வேண்டும்?
18. எது வரையும் பலிபீடத்தின் நெருப்பின் மேல் எரிபலி இருக்க வேண்டும்?
19. ஆண்டவருக்குச் செலுத்தும் நெருப்புப் பலிகளில் எதையும் தொடுகிறவன் எவ்வாறு இருப்பான்?
20. தமக்குச் செலுத்த வேண்டிய நேர்ச்சைகளைப் பற்றி ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கு எங்கு கட்டளையிட்டார்?

– **P.ஆல்வின் அண்ணாமலை,** தலைமை ஆசிரியர் (ஓய்வு).

## அடுத்த இதழ்

**பாலர்சபை திருவிழா, லூர்துமாதா திருவிழா மற்றும் அன்னையின் அற்புதங்கள் பற்றிய சிறப்பிதழாக வெளிவரவிருக்கிறது. இவைகளைப் பற்றிய கருத்துக்கள், கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. மேலும் விளம்பரங்களும் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் வந்து**

**சேர வேண்டிய கடைசி நாள் : 15?01?2015**

சந்தாதாரராக ஆகுங்கள் ! அன்னையின் அருள் பெறுங்கள் !

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.08.2014**

# திருத்தல வழிபாடுகள்

- ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாள மொழியில் திருப்பலி 11.00 மணி முதல் 12.00 மணி வரை ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி. 12.00 மணிக்கு நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். தேவைக்கேற்ப மாலை 4.00மணிக்கும், 6.30 மணிக்கும் திருப்பலி நடைபெறும்.
- முதல் சனி தவிர்த்து மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் புதன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள லூர்துமாதா கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் இரண்டாவது புதன் காலை திருத்தலத்தில் திருப்பலி, மாலை நான்கு சந்தி கெபியில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்
- மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.

மாதத்தின் முதல் வெள்ளி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் நடைபெறும்.

**இணையூர் வழிபாடுகள்.**

**நவமுதலூர்**

- ஞாயிறுதோறும் ஊர் ஆலயத்தில் மாலை திருப்பலியும், வெள்ளி மாலை புனித மிக்கேல் அதிதூதர் கெபியில் திருப்பலியும் மற்றும் மக்களின் தேவைக்கேற்ப வார நாட்களில் திருப்பலியும் நடைபெறும்.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி<br>சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி<br>நற்கருணை ஆசீர் |

